
# ஹோ-சி-மின்

627



ாஜினி

SCANNED

SCANNED

REGISTRAR

SEP 1958

MADRAS

V4313,1y7 M92
N58

109002

# ஹோ-சி-மின்

OFFICE OF THE REGISTRAR OF
22 SEP 1958
MADRAS

எழுதியவர் :
மாஜினி

★

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு கமிட்டி

முதற்பதிப்பு ஏப்ரல் 1958

109002

விலை அணா 4

அச்சிட்டோர்:
ஜனசக்தி பிரஸ்
சென்னை.

கிடைக்குமிடம்:
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
199, மவுண்ட்ரோட்
சென்னை-2

10, மேலக் கோபுர வாசல்
மதுரை

## முன்னுரை

விழிப்படைந்த, ஆசியாவின் தலை சிறந்த தலைவர்களிலே ஒருவர் வியட்னும் ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதியான டாக்டர் ஹோ சி-மின்.

பிரெஞ்சு ஏகாதிபத்திய அடிமை நுகத்தடியின் கீழே ஒரு நூற்றாண்டுக்கு மேலாக அல்லலுற்றுக் கிடந்த வியட்னும் மக்களை விழி கொள்ளச் செய்து, அந்த நாட்டை விடுதலைபெறச் செய்த மாவீரர் டாக்டர் ஹோசி-மின்.

அது மட்டுமின்றி, சுதந்திரம் பெற்ற நாடு சுபீட்சப் பாதையில் முன்னேறவும், உலகிலே சமாதானம் நிலவவும் இன்று அரும் பெரும் தொண்டாற்றி வருபவர் டாக்டர் ஹோசி-மின்.

இத்தகைய உத்தமரின் வீரஞ் செறிந்த வாழ்க்கை, இந்த நாட்டின் நல் வாழ்விலே அக்கறை கொண்ட ஒவ்வொரு தேசபக்தருக்கும் நல்வழிகாட்டும் ஒரு இலக்கணமாகும். ஆகவே அந்த வகையில் அவரது புகழ்மிக்க, வியப்புமிக்க சரித்திரத்தை மிக மகிழ்ச்சியோடு பிரசுரிக்கிறோம்.

தமிழ்நாடு கமிட்டி

# ஹோ-சி-மின்

## 1

**1911**ம் வருடம். ஒரு தினம். மத்திய வியட்நாமில் கிம்லியன் என்னும் கிராமம்.

இரவு 1 மணி. கண்ணெட்டிய தூரமெங்கும் ஒரே மையிருட்டு; எங்கும் புதைகுழி மௌனம். கிராமமே அடித்துப் போட்டாற்போல நித்திரையில் ஆழ்ந்திருந்தது.

இந்த மோனத்தைக் கலைத்துக்கொண்டு அந்த நடுநிசியில் ஒரு பிரெஞ்சு போலீஸ்படை திமுதிமுவென்று ஒரு சிறு வீட்டின் முன்வந்து நின்றது.

"யாரங்கே?"

இது போலீஸ் படைத்தலைவனின் அதிகாரத் தழும்பேறிய குரல்.

ஒரு சில விநாடிகளில் அந்த சின்னஞ்சிறு வீட்டின் மூங்கிற் கதவுகள் 'கிரிச்'சிட்டுக்கொண்டு திறந்தன. நடுத்தர வயதைக் கடந்த ஒருவர் கையிலே ஒரு விளக்கை ஏந்திய வண்ணம் நின்றிருந்தார். அவருக்குப் பின்னால் அவரது குடும்பத்தினர் என்னவோ ஏதோ என்று பதறிக்கொண்டிருந்தனர்.

"உங்களையெல்லாம் கைது செய்திருக்கிறேன்" என்றான் போலீஸ் அதிகாரி தனது கரகரத்தக் குரலில்.

"என்?" மெல்லிய குரலில் சுருக்கமாகக் கேட்டார் வீட்டின் பெரியவர்.

"பிரெஞ்சு ஆட்சியைக் கவிழ்க்க நீங்களெல்லாம் சதிசெய்ததாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. உம்...மற்றவையெல்லாம் ஸ்டேஷனில் பேசிக்கொள்ளலாம். இப்போது வண்டியில் ஏறுங்கள்" என்று அதட்டினான் அதிகாரி.

இதற்குள்ளாக இந்த அமளிதுமளி கேட்டு அண்டை அயல் வீடுகளில் இருந்தவர்களெல்லாம் அங்கு கூடிவிட்டார்கள். போலீ

ஸார் அந்தப் பெரியவரையும் அவரது குடும்பத்தினரையும் வண்டியில் ஏற்றிஞர்கள்.

ஆனால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறு பையனை மட்டும் போலீஸார் விட்டுவிட்டார்கள். பையனுக்கு 19 வயது தான் இருக்கும். காற்று சற்று பலமாக அடித்தால் ஆகாயத்தில் பறந்துவிடுவானே என்று நினைக்கும் அளவுக்கு மெலிந்த ஒல்லிய உருவம். இத்தகைய ஒரு 'நோஞ்சானுன' பாலகன் பிரெஞ்சு ஆட்சியைக் கவிழ்த்துவிடுவான் என்று அந்தப் போலீஸ் அதிகாரியால் நம்பமுடியவில்லை. ஆகவே, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய், மூத்தமகன், மகள் முதலியவர்களையெல்லாம் கைது செய்துவிட்டு இந்த 'வத்தல்' பையனை மட்டும் அதிகாரி விட்டு விட்டான்.

வண்டியோடு போலீஸ் படை நகர்ந்தது. 'அப்பா' என்று அடிவயிற்றை எக்கி பையன் கூச்சலிட்டான்

"மகனே, கலங்காதே. எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் உன் அருமைத் தாய்நாட்டை மட்டும் மறக்காதே" என்ருர் பெரியவர். அவரது பேச்சிலே கனிவும், உறுதியும், தெளிவும் தொனித்தன.

இதற்குமேல் போலீஸ் லாரி அங்கு நிற்கவில்லை. புழுதியை வாரி இறைத்துக்கொண்டு இருளிலே ஓடி மறைந்தது.

தாயையும், தந்தையையும் தனயனையும் சகோதரியையும் அபகரித்துச் சென்ற அந்தப் போலீஸ் பூதம் சென்ற திக்கிலேயே வைத்த விழிவாங்காமல் கண் கலங்கி நின்ருன் சிறுவன். அயலில் நின்றவர்கள் அவனைத் தேற்றிஞர்கள்.

நாட்கள், வாரங்கள் ஓடின. ஒரு தினம், வாழைத்தண்டு போன்ற அந்தப் பச்சிளம் சிறுவனின் உள்ளம் சிறகொடிந்த பறவைபோல துடிதுடிக்கும் செய்தி வந்தது. இந்தோ சீனுவிலே பிரெஞ்சு ஆட்சிக்கு முடிவுகட்ட அவனது அன்னையும் பிதாவும் உடன் பிறந்தோரும் இரகசிய சதி செய்தார்களாம். இதற்காக அவர்கள் அனைவருக்கும் ஆயுள் தண்டனை விதித்து விட்டார்கள் பாவிகள்!

இப்போது அந்தச் சிறுவன் ஆதரிப்பாரற்ற அனுதை, மேலே ஆகாயம், கீழே பூமி இவற்றைத் தவிர அவனைத் தாங்க இந்த உலகிலே வேறு நாதியில்லை. என்ன செய்வான் பாவம்! அவனது குடும்பத்தின்மீது ஏற்கனவே ஏழ்மையின் பரிபூரண கடாட்சம் படிந்திருந்தது. அதுவும் உழைக்கும் பெரிய ஜீவன்கள் சிறைக்கூடம் ஏகியபிறகு சொல்லவும் வேண்டுமா? வயிறென்று ஒன்று

இருக்கிறதே அதன் உபாதையைத் தீர்க்கவேண்டுமல்லவா? ஆகவே கிளிக் கழுத்தின் பொன்வரி போல அப்போதுதான் அரும்புமீசை துளிர்விடும் அந்தச் சிறுவன் தன் "வயிற்றுப் பாட்டை" தீர்ப்பதற்காக, பட்டினிச் சம்பளத்தில் ஒரு குமாஸ்தா வாக பணியாற்றத் துவங்கினன்.

ஆனல் அவனுக்கு வேலையிலே கொஞ்சமும் நாட்டம் செல்ல வில்லை. 'மகனே உன் தாய்நாட்டை மறந்துவிடாதே' என்று பிரிந்துபோகு முன்தந்தை கூறிய வார்த்தைகளே அவனது உள்ளத் தின் அடிஆழத்தில் சர்வசதாவும் ரீங்காரம் செய்துகொண் டிருந்தன.

"என் மணித்திருநாடு மானமிழந்து, மாற்றானின் காலடியிலே சரணடைந்து கிடப்பதா?"

"என்னருமை தேச மக்கள் அடிமை நுகத்தடி சுமந்து, செக்கு மாடுகளாக, கொத்தடிமைகளாக இருப்பதா?"

இப்படி மலைமலையான எண்ணங்கள் அந்த இளைஞனின் இத யத்தை எரிசரங்கள் போலத் தாக்கின.

"இல்லை, இல்லை. இந்தோ சீனம் என்கிற போதினில் இன் பத் தேன் வந்து பாயும் என் தேசம் விடுதலை பெற்றுத்தான் ஆக வேண்டும்" என்று அவனது ஒவ்வொரு நரம்பும், நாளமும், இத யத் துடிப்பும் பேசின.

எனவே, பிரெஞ்சு ஏகாதிபத்திய சழக்கர்களை இந்தோ சீன மண்ணிலிருந்து விரட்டியே தீருவது என்று முடிவு செய்தான். இதற்காக ஒரு புரட்சி இயக்கத்தைத் துவக்குவது என்றும் தீர்மா னித்தான். ஆனல் இதனை எங்ஙனம் செய்வது? இதற்கு அனு பவம் வேண்டுமல்லவா? பிறரின் ஆதரவும் அனுதாபமும் வேண்டு மல்லவா? அதோடு இந்தோ சீனத்தில் இந்தப் புரட்சி இயக்கம் பகிரங்கமாக ஆரம்பமாவதை பிரெஞ்சு ஆதிபத்திய வெறியர்கள் அனுமதிக்கமாட்டார்கள் அல்லவா? ஆகவே முதலில் வெளிநாடு களுக்குச் சென்று அங்கே இந்த சுதந்திர இயக்கத்திற்கான ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்வதென்று உறுதிகொண்டான்.

ஆனல் சாதாரண ஒரு ஏழை விவசாயியின் மகன் எப்படி வெளிநாடுகளுக்குச் செல்ல முடியும்? கையில் செப்பாலடித்த காசுகூட இல்லாத நிலையில் எவ்விதம் நீண்ட நெடுந்தூரப் பயணம் பற்றி சிந்திக்க முடியும்?

எனினும் இதற்காக அந்த வாலிபனது மனம் உடைந்துவிட

வில்லை. என்ன நேரினும், எவ்விதமேனும் கப்பலேறி விடுவது என்று அவன் தீர்மானமாக உறுதிகொண்டான்.

இவ்விதம் பிஞ்சு வயதிலேயே நாட்டின் விடுதலை வேள்வியிலே அஞ்சா நெஞ்சோடு குதித்த இந்த வீர இளைஞன்தான் டாக்டர் ஹோ சி-மின்!

## 2

1913-ம் ஆண்டு, சைகோன் துறைமுகத்தில் ஒரு பிரயாணி கப்பல் நங்கூரம் பாய்ச்சி நின்றிருந்தது. மாலைச் சூரியன் மலைவாயிலில் விழும் நேரத்திலே, மாய் என்னும் மாலுமி, கப்பலின்மேல் தளத்தில் நின்ற வண்ணம் அந்தி வானத்தின் அழகுக் காட்சிகளை கண்டு ரசித்துக்கொண்டிருந்தான்.

அப்போது சதையெல்லாம் வற்றிக் கரைந்து, புலிவேஷக்காரன் மாதிரி விலா எலும்புகளெல்லாம் வெளியே தெரிய ஒரு மெலிந்த உருவம் தயங்கித் தயங்கி அவன் முன்வந்து நின்றது.

“யார் நீ? என்ன வேண்டும்?” என்று கேட்டான் மாய்.

“என் பெயர் பா. கப்பலில் ஏதாவது வேலை வேண்டும்” என்றது தளிர்கொடி போன்ற அந்த உருவம்.

இதனைக் கேட்டதும் மாய்க்கு சிரிப்புத் தாங்க முடியவில்லை. இந்தக் “குடுவான்” கப்பலில் வேலை செய்கிறுனும்! இதை அவனால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. ஆகவே ‘ஓ, ஓ, ஓ’ வென்று அந்தக் கப்பலே அதிர சிரித்து விட்டான்.

“என்ன பயலே, உன்னால் என்ன வேலை செய்யமுடியும்?” என்று கேலியாகக் கேட்டான் மாய்.

“என்ன வேலை கொடுத்தாலும் செய்கிறேன்” என்றான் பா. அவனது குரலிலே தொனித்த அந்தரங்க சுத்தியான உறுதி மாயை திகைக்க வைத்துவிட்டது. அதோடு அந்த வாலிபன்மீது அவனுக்கு இனம் தெரியாத ஏதோ ஒரு பாசமும் ஏற்பட்டுவிட்டது. ஆகவே, கப்பல் கேப்டனிடம் சிபாரிசு செய்து அவனுக்கு சமையற்கார உதவி ஆள் உத்தியோகம் வாங்கிக் கொடுத்து விட்டான்.

இந்த சமையற்கார பா தான் டாக்டர் ஹோ-சி-மின் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

பா வின் சக்திக்கு இந்த வேலை மிதமிஞ்சியதுதான். அதோடு மற்றவர்களுக்கு 100, 200 பிராங்குகள் என்று சம்பளம் கிடைத்துக்கொண்டிருக்கும்போது பா வுக்குக் கிடைத்த சம்பளம் கேவலம் 10 பிராங்குகள்தான். எனினும் இதற்காக அவர் மனம் தளர்ந்துவிடாது, காலை 4 மணியிலிருந்து இரவு 9 மணிவரை ஓயாது ஒழியாது, சலியாது சளைக்காது வேலை செய்தார்; நூற்றுக் கணக்கான தட்டுகளைக் கழுவினார்; பீப்பாய் பீப்பாயாகத் தண்ணீர் நிரப்பினார்; காய் கறிகள் முதலியவற்றையெல்லாம் அறுத்து வைத்தார். இப்படி அடுக்கு அடுக்கான பல வேலைகள்.

இத்தனை கடுமையான உழைப்பிற்குப் பிறகு அவர் 'அக்கடா' என்று படுத்து அயர்ந்து தூங்கி விடுவதில்லை. மற்றவர்களெல்லாம் சீட்டாட்டம் முதலிய களியாட்டங்களில் ஈடுபட்டு, குடித்துக் கும்மாளமடித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் பா மட்டும் இரவு 12 அல்லது 1 மணி வரை ஆழ்ந்து படித்துக் கொண்டிருப்பார். அல்லது 'கல்வி வாசனையற்ற சக தொழிலாளர்களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுப்பார்.

அவர் ஒரு தினம்கூட தப்பித் தவறி கடுஞ் சொல் உபயோகித்தது கிடையாது. சர்வ சதாவும் புன்முறுவலோடு ரொம்பவும் அன்பாகப் பிறரிடம் பழகுவார். இதனால் அவரிடம் கப்பலிலிருந்த அனைவரும் பெருமதிப்பு வைத்திருந்தனர்.

கப்பல் ஒவ்வொரு தேசமாக கடந்து சென்றுகொண்டிருந்தது. ஒவ்வொரு துறைமுகத்திலும் நிற்கும்போதும் இதரர்களெல்லாம் நகரத்திற்குள் சென்று நாடகம், நடனம், களிப்புகள் என்று எங்கெங்கோ போய் கூத்தடித்துத் திரும்புவார்கள்.

ஆனால் பா இதற்கு விதிவிலக்கு. அவர் யாருடனும் சேராமல் நகரத்திற்குள் தனியாகச் சென்று அங்கு மக்கள் எப்படி வாழ்கிறார்கள்; என்ன நிலையில் உள்ளார்கள்; ஏழைகளின் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பது போன்ற விஷயங்களை ஆராய்ந்து, விவரங்கள் சேகரித்து வருவார். சில சமயங்களில் இவை சம்பந்தமாகப் புகைப் படங்களும் எடுத்து வருவார்.

இப்படி அவர் முதல் தடவையாக பிரெஞ்சு மண்ணில் மார்செல்ஸ் நகருக்குள் போய்விட்டு திரும்பி வந்தபோது பின் கண்டவாறு கூறினார்:

"என் நாட்டில் உள்ளதுபோல பிரான்ஸிலும்கூட அல்லவா ஏழைகள் இருக்கிறார்கள்! எங்களை 'நாகரீகப்படுத்து'வதற்கு முன்பு முதலில் தங்கள் நாட்டுச் சகோதரர்களை இந்தப் பிரெஞ்சு ஆட்சி

யாளர்கள் நாகரீகப்படுத்தினால் என்ன ?" என்று பா யிடம் ரொம்பவும் அர்த்தப் புஷ்டியுடன் கேட்டார்.

கப்பல் பிரான்ஸை விட்டு புறப்பட்டு ஸ்பெயின், போர்ச்சுக்கல் அல்ஜீரியா, டூனிஷ்யா ஆகிய தேசங்களை யெல்லாம் கடந்து கிழக்கு ஆப்பிரிக்கத் துறைமுகமான டாகர் வந்தடைந்தது. புயல் காரணமாக கப்பல் துறைமுகத்திற்குள் நுழைய முடியவில்லை, ஆயுள் படகுகளையும் (Life Boats) செலுத்த முடியவில்லை. ஆகவே, கரையிலிருந்த பிரெஞ்சு அதிகாரிகள் கப்பலோடு தொடர்பு கொள்ள சில ஆப்பிரிக்கர்களை நீந்திச் செல்லும்படி பணித்தார்கள்.

அதன்படி கடலில் குதித்த ஒவ்வொரு ஆப்பிரிக்கனையும் வான் முட்ட எழுந்த பயங்கர அலைகள் விழுங்கி ஏப்பமிட்டுவிட்டன. இந்தக் கோரக் காட்சியைக் கண்டு பா நடுநடுங்கி விட்டார். இதனைக் கண்டு கப்பலிலிருந்த பிரெஞ்சுக்காரர்கள் இடிஇடித்தது போலச் சிரித்தார்கள்.

"ஒரு ஆசியன் அல்லது ஒரு ஆப்பிரிக்கனின் உயிர் எங்களுக்கு ஒரு பென்னிகூட பெறாது!" என்று ஒரு பிரெஞ்சுக்காரன் கூறிய சுடுசொல் பா வின் நெஞ்சத்தை துள்ளிவரும் வேல்போல் தாக்கி கண்களில் பொலபொல வென்று நீரை கொட்டவைத்து விட்டது.

"பிரான்சிலே பிரெஞ்சுக்காரர்கள் நல்லவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வெளியே காலனி ஆதிக்கக்காரர்களாக இருக்கும்போது எவ்வளவு மனிதப் பண்பற்ற மிருகவெறிக்காரர்களாக மாறிவிடுகிறார்கள்!" என்று மா யிடம் கண்ணீரும் கம்பலையுமாகக் கூறினார் பா.

இவ்விதம் கப்பல் பயணத்திலே நான்காண்டுகள் அவருக்கு எண்ணற்ற அனுபவங்கள் கிடைத்தன. இந்த அனுபவங்கள் அவரது தாயக விடுதலைப் போராட்டத்திற்கு பிற்காலத்தில் பெரிதும் உதவிகரமாக இருந்தன!

கப்பலில் சமையல் வேலையை விட்டுவிட்டு இங்கிலாந்திற்குச் சென்று நிறைய விஷயங்களை கற்றுக்கொள்ள வேண்டும் என்று பா முடிவு செய்தார்.

## 3

1917–ம் வருடம். இப்போது லண்டனில் ஒரு பெரிய ஓட்டலில் பா வைப் பார்க்கிறோம்.

அங்கே பாத்திர பண்டங்களையும் தட்டுக்களையும் பிளேட்டுகளையும் கழுவும் வேலை அவருக்கு. ஹோட்டலுக்குச் சாப்பிட

வருபவர்கள் விட்டுப்போகும் மிச்சசொச்ச உணவுப் பொருள்களை இதர வேலைக்காரர்கள் அப்படியே குப்பையில் கொண்டுபோய் கொட்டிவிடுவார்கள். ஆனால் பா அப்படி செய்வதில்லை. அதற்குப் பதிலாக அவற்றை சுத்தமாக, பத்திரமாக சேகரித்து வைத்திருந்து, உண்ண உணவின்றி வாடும் ஏழைகளுக்கு கொடுத்துதவுவார். இவற்றை எல்லாம் கண்டு ஏனையோர் அவரை 'பைத்தியம்' என்று எள்ளி நகையாடுவார்கள்.

பா வின் வேலை நேரம் காலை 8 லிருந்து மத்தியானம் 1 மணி வரை; பின்னர் மாலை 5 மணியிலிருந்து இரவு 10 மணிவரை. இந்த வேலை நேரத்திற்கு இடைப்பட்ட அவகாசத்தில் 1 நிமிடத்தைக்கூட அவர் வீணடிக்கமாட்டார். இந்த ஓய்வு நேரத்தில் ஒரு இத்தாலியரிடம் ஆங்கிலம் கற்பார். பின்னர் ஒரு புத்தகக் கட்டோடு ஹைட் பார்க்கிற்குப்போய் அங்கே மும்முரமாக படிப்பதில் ஈடுபட்டிருப்பார்.

ஒரு தினம் ஹோட்டலில், சோகமே உருவெடுத்தது போன்று அவர் ஒரு மூலையில் மௌனமாக உட்கார்ந்திருந்தார். அவர் கண்களிலிருந்து மாலை மாலையாக கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. கையிலே அன்று வெளிவந்த தினப்பத்திரிகையை வைத்திருந்தார். அவர் அழுதுகொண்டிருப்பதைப் பார்த்து சகோதரத் தொழிலாளர்கள் என்னமோ ஏதோ என்று பதைபதைத்துப் போய், அவரது விசனத்துக்குக் காரணம் கேட்டனர்.

" இதோ இந்தப் பத்திரிகையைப் பாருங்கள். தலை சிறந்த ஐரிஷ் தேசபக்தரான கார்க் நகர மேயரை இங்கிலீஷ்காரர்கள் கைது செய்திருக்கிறார்கள். அவர் 69 நாட்கள் அன்ன ஆகாரம் உட்கொள்ளாமல் உண்ணுவிரதமிருந்து தான் பிறந்த சொந்த நாட்டிற்காக உயிர் நீத்திருக்கிறார். எத்தகைய மகத்தான தியாகம், வீரம் பாருங்கள்! இத்தகைய உத்தமர்களைக்கொண்ட ஒரு நாடு என்றுமே எதிரிகளிடம் சரணடைவதில்லை" என்று உணர்ச்சி ததும்பி வழிய கூறினார் பா.

இப்படி இங்கிலாந்திலே அவருக்குக் கிடைத்த பல அனுபவங்கள் அவர் உள்ளத்திலே நீறுபூத்த நெருப்பாக கனன்றுகொண்டிருந்த தேசபக்தக் கனலை மேலும் கிண்டிக் கிளறி பெரிய ஜுவாலையாக்கிவிட்டன!

கினைவிலே தாய்த் திருநாடும், நெஞ்சிலே அதனை விடுவிக்க உறுதியும் கொண்டு, மீண்டும் பிரான்ஸுக்கு திரும்புவதென்று பா தீர்மானித்தார்.

1918-ம் ஆண்டு. முதல் மகாயுத்தம் அப்போதுதான் முடிவடைந்திருந்தது. ஜெர்மனி தோற்று, கெய்சர் நார்வேக்கு ஓடிவிட்டான். வெர்சேல்ஸில் சமாதான மகாநாடு நடைபெற்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் அமெரிக்க ஜனாதிபதி வில்சன் தமது பிரசித்திப்பெற்ற 14 அம்ச திட்டங்களை வெளியிட்டிருந்தார். இந்தத் திட்டங்கள், அடக்கி ஒடுக்கப்பட்டு அதலபாதாளத்தில் அமிழ்ந்து கிடந்த காலனி நாடுகளிடையே என்றுமில்லாத உற்சாகத்தையும் நம்பிக்கையையும், தெம்பையும் கிளர்த்திவிட்டிருந்தன. எனவே, இந்தச் சமயத்தில் வந்து, தங்கள் தேசங்களின் விடுதலையை வற்புறுத்தி முறையிட்டால் விமோசனம் கிடைக்காதா என்று பல அடிமை நாடுகளிலிருந்து வெர்செல்ஸுக்கு பலர் கோஷ்டி கோஷ்டியாக வந்திருந்தனர்.

இப்படி வந்திருந்தவர்களிலே இந்தியர், ஐரிஷ்காரர்கள், சீனர்கள், கொரியர்கள், அராபியர்கள் முதலானோர்கள் இருந்தார்கள். இவர்களிலே 28 வயதுகூட நிரம்பாத நிகுயன் அய் குவாக் என்னும் சாந்த சொரூபியான ஒரு வாலிபரும் இருந்தார்.

இந்த வாலிபர் வேறு யாருமில்லை. நமது ஹோ சி-மின்தான்! அவர்தான் இந்தப் புதுப் பெயர் புனைந்து அங்கு வந்திருந்தார். இந்தோ சீனாவுக்கு பிரெஞ்சுக்காரர்கள் உடனடியாக சுதந்திரம் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி நேச நாடுகளிடம் அவர் ஒரு விடுதலை சாசனத்தை சமர்ப்பித்தார். இந்த சாசனத்தில், கொடுங்கோல் அந்நியர் ஆட்சியின்கீழ் தன் நாடு அனுபவித்து வரும் கோரக் கொடுமைகளையெல்லாம் கல்லும் உருக வர்ணித்திருந்தார்.

ஆனால் வெர்சேல்ஸ் மகாநாடு எதிர்பார்த்தபடி காலனி நாடுகளின் சுதந்திரக் குரலை காதில் போட்டுக்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக இந்த மகாநாடு அடிமைப்பட்ட மக்களின் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் சிதறடித்தது. வில்சனின் 14 அம்சத் திட்டங்கள் வெறும் ஏட்டுச் சுரைக்காயாக, வாய்ப்பந்தலாக முடிந்தன!

இதிலிருந்து நிகுயன் ஒரு நல்ல பாடம் கற்றுக்கொண்டார், அதாவது சுதந்திரம் பற்றியும், ஜனநாயகம் பற்றியும் யுத்தகாலத்தில் அரசியல் வாதிகள் பேசுவதெல்லாம் மக்களை ஏமாற்றும் வெற்றுரைகள்; இவற்றை நம்பக்கூடாது. சுதந்திரம் என்பது ஒருவர் கொடுத்து இன்னொருவர் வாங்கும் கடைச் சரக்கல்ல. ஒரு நாடு

விடுதலை பெறவேண்டுமென்றால் அதற்கு தனது சொந்த பலத்தில் தான் முழுமுதல் நம்பிக்கைக் கொள்ளவேண்டும்.

இந்த அரிய உண்மையை அனுபவ ரீதியாகப் பெற்று கிருயன் வெர்சேல்ஸிலிருந்து பாரிஸ் வந்து சேர்ந்தார்.

# 5

உலக 'நாகரிக'த்தின் ஊற்றுக்கண் என்று சொல்லப்படும் பாரிஸ் நகரில் கிருயனுக்கு யாரும் தெரியாது; பரிச்சயமானவர்களோ, நண்பர்களோ எவரும் கிடையாது. அண்ட புகலிடம் அளித்து ஆதரிப்பவர்கள் ஒருவருமில்லை.

எனினும் இதற்காக அவர் மனம் பேதலித்து விடவில்லை. ஏற்கனவே அவருக்குப் புகைப்படத் தொழில் கொஞ்சம் தெரியும். ஆகவே ஒரு 'ஸ்டுடியோவி'ல் போட்டோகிராபராக வேலை செய்தார். அதோடு கீழ்த்திசை சித்திரக் கலையிலும் அவருக்கு ஓரளவு பரிச்சயமுண்டு. எனவே இந்த சித்திர வேலையிலும் அவ்வப்போது ஈடுபட்டார்.

இவற்றிலிருந்து ஏதோ வயிற்றை நனைக்கும் அளவுக்கு சிறிது வருமானம் கிடைத்துக் கொண்டிருந்தது. இதனை வைத்து நகரின் புறக்கணிக்கப்பட்ட ஒரு சேரிப் பகுதியில் குகைபோன்ற ஒரு குடிசையில் ஜாகை வைத்துக்கொண்டு, காலத்தைக் கடத்தி வந்தார். இத்தனை வாட்டும் வறுமைக்கிடையேயும் அவர் கனவிலும் தன் தாய் நாட்டை மறந்ததில்லை. பிறந்த நாட்டின் விடுதலையே அவரது உயிர் மூச்சாக இருந்து வந்தது.

இந்தச் சமயம் வியட்னாமின் சுதந்திர வேட்கையைப்பற்றி எந்தப் பிரெஞ்சுப் பத்திரிகையும் ஒரு வரிகூட தப்பித் தவறியும் வெளியிடுவதில்லை. ஆனால் 'பீபிள்' (மக்கள்) என்னும் ஒரே ஒரு பிரெஞ்சு பத்திரிகை மட்டும் வெர்சேல்ஸ் மகாநாட்டில் கிருயன் சமர்ப்பித்த வியட்னாம் சுதந்திர சாசனத்தை அப்படியே பிரசுரித்திருந்தது.

கிருயனுக்கு இதனைக் கண்டு ஒரே ஆச்சரியம். இந்தப் பத்திரிகையை நடத்தும் ஆசிரியரைக் காணவேண்டுமென்று அவருக்கு அளவற்ற ஆவல் எழுந்தது. எனவே ஒருநாள் அந்தப் பத்திரிகையின் காரியாலயத்திற்குச் சென்றார்.

பத்திரிகையின் ஆசிரியர் சார்லஸ் லாங்கே என்பவர். அவர் மனிதகுல மாமேதை கார்ல் மார்க்ஸின் மருமகனுவர். கிருயனை அவர்

மிகுந்த அன்போடு வரவேற்ருர். இதைக்கண்டு ஙிகுயன் திகைத்து விட்டார். ஏனெனில் இதுவரை அவரை எவரும் இவ்வளவு உள்ளன்போடும், மரியாதையோடும், கௌரவத்தோடும் வரவேற்றதில்லே. அதோடு என் 'அன்புத் தோழரே' என்று லாங்கே அவரிடம் அளவளாவியது கண்டு ஙிகுயன் உள்ளம் பூரித்துவிட்டார். ஒரு மதிப்பு மிகுந்த பத்திரிகாசிரியர், பெரிய அறிஞர், அதுவும் வயது முதிர்ந்தவர். தன்னே சரிசமமாக பாவித்து 'தோழரே' என்று அழைத்ததை ஙிகுயன் தன் வாழ்நாளிலே இப்போதுதான் முதல் தடவையாகக் கேட்டார்!

லாங்கே ஙிகுயனுக்குப் பல விஷயங்களே போதித்தார்; வியட்னும் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு பரிபூரண ஆதரவு தெரிவித்தார்; தனது 'பீப்பிள்' பத்திரிகையில் வியட்னும் சுதந்திரம்பற்றி கட்டுரைகள் எழுதும்படியும் ஙிகுயனே வற்புறுத்தினுர்

இதேபோல வெகுசீக்கிரமே 'தொழிலாளர் வாழ்க்கை' என்னும் பத்திரிகாசிரியரோடும் ஙிகுயனுக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவரும் தமது பத்திரிகையில் வியட்னும்பற்றி கட்டுரைகள் எழுதும்படி கூறினுர். ஆனுல் இதில் ஙிகுயனுக்கு ஒரு பெரும் சங்கடம் இருந்தது. அதாவது அவருக்கு பிரெஞ்சு மொழியில் சரிவர எழுத வராது. எனவே, கட்டுரைகள் எழுதும்படி 'தொழிலாளர் வாழ்க்கை' ஆசிரியர் கேட்டுக்கொண்டபோது ஙிகுயன் தயங்கினுர். இதனே தெரிந்துகொண்ட பத்திரிகாசிரியர், "ஆரம்பத்தில் ஆறு வரிகள் எழுதிக்கொடுத்தால் போதும். நான் திருத்திப் பிரசுரிக்கிறேன்" என்று ஊக்குவித்தார்.

இதன்படியே பிரெஞ்சு மொழியில் ஙிகுயன் எழுதிக் கொடுத்த ஆறு வரிகள் பிரசுரமாயின. பின்னர் இது படிப்படியாக ஆறு பன்னிரண்டாகி, பன்னிரண்டு இருபத்தி நான்கு வரிகளாகி, வெகு சீக்கிரமே பத்தி பத்தியாக எழுதும் ஒரு தலேசிறந்த பத்திரிகையாளராகிவிட்டார் ஙிகுயன்!

இது மட்டுமல்ல, பத்திரிகையிலிருந்து அவரது கவனம் உலக இலக்கியத்தின்பாலும் சென்றது. சாகாவரம்பெற்ற சர்வதேச இலக்கிய மேதைகளின் அரும்பெரும் படைப்புகளே அந்தந்த மூலங்களிலேயே படிக்கவேண்டும் என்ற ஆர்வம் அவரிடம் மதர்ந்து கிளர்ந்தது. சளேயாத சலியாத விடாமுயற்சியால் இந்த ஆசையும் வெகு விரைவில் பூர்த்தியாயிற்று. ஷேக்ஸ்பியர், டிக்கன்ஸ் போன்ருரது நூல்களே ஆங்கிலத்திலேயே படித்தார்; லூஹுசன் முதலியோர்களது படைப்புகளே சீன மொழியிலே சுவைத்தார்; விக்டர் ஹியூகோ, எமிலி ஜோலா ஆகியோர்களது நவீனங்களே பிரெஞ்சு

மொழியிலே படித்து அனுபவித்தார்; இன்னும் இதுபோன்று ரஷ்ய மொழி கற்று டால்ஸ்டாய், செக்காவ் முதலியோரது இலக்கியக் கருவூலங்களை அள்ளி அள்ளிப் பருகினர்.

இதனால் அவரது இலக்கிய அறிவும் செறிவும் வளர்ந்து முதிர்ந்தது. பிரெஞ்சு மொழியிலேயே அவர் நாவல் எழுதவும் ஆரம்பித்தார். அவரது முதல் நாவல் 'ஹூமனிட்டே' என்னும் நாளிதழில் இரண்டு பாகங்களாக பிரசுரமாயிற்று. பாரிஸ் நகரில் ஒரு பாட்டாளியின் நரக வாழ்வை—சொல்லப் போனால் அவரது துயரமிகுந்த சொந்த வாழ்வையே இந்த நாவலில் தத்ரூபமாக படம் பிடித்துக் காட்டியிருந்தார். இந்த நாவல் எழுதியதற்கு சன்மானமாக அவருக்கு 100 பிராங்குகள் கிடைத்தது. இந்தத் தொகை அவருக்கு ஒரு பெரிய விஷயம். அதோடு உணர்ச்சி மயமான இந்த நாவலைப் படித்துப் பார்த்து ஏராளமான பேர் அவரைப் பாராட்டினர்.

இந்தப் பாராட்டுகள் அவர் மேலும் மேலும் எழுத ஊக்கமும் ஆக்கமும் அளித்தன. உலைக்களத்திலிருந்து தெறிக்கும் தீப் பொறிகள்போல அவரது எழுத்துக்கள் பிரெஞ்சு ஏகாதிபத்திய வாதிகளின் அடிவயிற்றிலே எரி மூட்டின. அடுக்கு அடுக்காக பல புத்தகங்கள் எழுதி அவற்றிலே ஆதிபத்தியக்காரர்களை அம்பலப்படுத்தி, அவர்களைசாடி மோதினர். அவர் எழுதிய 'மூங்கில் பறவை நாகம்' என்னும் நாடகம்கூட காலனி ஆதிக்கத்தின் பயங்கர ரூபத்தைத் தோலுரித்துக் காட்டிற்று.

## 6

நமது கியுயன் பாரிசுக்கு தன்னந் தனியாகத்தான் வந்தார்; உற்றார் உறவினர், ஆற்றுவோர் தேற்றுவோரின்றித்தான் அவர் இந்த பிரெஞ்சு மண்ணிலே காலடி எடுத்து வைத்தார். ஆனால் இன்று பாரிஸிலுள்ள நல்லவர்களெல்லாம் அவரது நண்பர்களாகி விட்டார்கள்; ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள் எல்லாம் அவரது அன்பர்களாகி விட்டார்கள். இன்னொருபுறம் கியுயன் என்றால் காலனி ஆதிக்க வெறியர்களுக்கு கசக்கும் வேப்பங் காயாகி விட்டது!

பின்னர் சொல்லவேண்டுமா? பிரெஞ்சு சர்க்கார் தங்களது அத்தனை பாணங்களையும் அவர் மீது கட்டவிழ்த்துவிடக் கிளம்பினார்கள். அவர் எங்கு சென்றாலும் நிழல் போல் தொடர்ந்து வேவு பார்த்தார்கள்; கைக்கூலிகளையும், ரௌடிகளையும் ஏவி

விட்டு அவர் மீது வசைமாரி பொழிந்தார்கள்; அவரை எவரும் வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது என்று கடைக்காரர்களுக்குக் கட்டளை இட்டார்கள்; அவரது 'பாஸ் போர்ட்டை' பறித்துக் கொண்டார்கள்; லஞ்சம் கொடுத்து அவரை தங்கள் எடுபிடியாக்க முயற்சித்துப் பார்த்தார்கள்; கடைசியாக பிரெஞ்சுக் காலனி மந்திரியே அவரை நேரில் வரவழைத்து 'தாஜா' செய்யப் பார்த்தார்.

ஆனால் இத்தனைக்கும் மசியாது, தான் கொண்ட கொள்கையிலிருந்து அணுவும் பிசகாது, அசையாத உருக்குக் குன்றமாக உறுதியோடு நின்றார் நிகுயன். தினமும் அதிகாலையிலேயே எழுந்து, அரை நாள் வேலை செய்து, அன்றைய கால் வயிறு உணவுக்கு ஏதாவது வழி செய்துகொள்வார். பின்னர் புத்தக நிலையத்திற்குச் சென்று படிப்பார். அல்லது பொதுக் கூட்டங்கள் ஏதாவது இருந்தால் பேசுவார். இந்தக் கூட்டங்களிலே காலனி நாடுகளின் பரிதாப நிலைபற்றி கேட்போர் உள்ளம் உருக பேசுவார். இவ் வகையில் லியோன் புளும், மார்சல் கேச்சின் நாவலாசிரியர் கொலேட் முதலிய அறிஞர்களின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது.

இது மட்டுமின்றி வர்ணனைக்கு எட்டாத ஏழ்மைக்கிடையேயும் அவர் பாரிசிலிருந்து சுவிட்ஜர்லாந்து, ஜெர்மனி, இத்தாலி முதலிய தேசங்களுக்கெல்லாம் சென்று, பற்பல விஷயங்களைக் கற்றறிந்து திரும்பினார். பிரெஞ்சு அடிமை நுகத்தடியின் கீழ் சிக்குண்டு கண்பிதுங்கி நிற்கும் டுனிஷ்யா, மொராக்கோ, அல்ஜீரியா மடகாஸ்கர் முதலிய நாடுகளின் புரட்சித் தலைவர்களை சந்தித்தார். அவர்களோடு ஒன்றுசேர்ந்து பாரிசில் காலனி நாடுகளின் லீக் என்னும் ஸ்தாபனத்தை அமைத்தார். அடிமை நாடுகள் சுதந்திரமடைய பாடுபடுவதே இந்த லீகின் நோக்கம்.

நாளுக்கு நாள் நிகுயனுக்கு நண்பர்கள் பெருகினார்கள். அவர்களது அன்பும், ஆதரவும், துணையும் கொண்டு பரியா என்னும் பத்திரிகையைத் துவக்கினார். இப்பத்திரிகைக்கு இவரே ஆசிரியர், பிரசுரகர்த்தா, மானேஜர், 'காஷியர்' கம்பாசிட்டர், ஆபீஸ் பாய், எல்லாம்! அதுமட்டுமல்ல. பத்திரிகையை எழுதி, தயாரித்து, அச்சடித்து இவரே கடைகளுக்குக் கொண்டுபோய் விற்கவும் செய்வார்!

மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிதென்பார்களே அதுபோல, பரியா சின்னஞ்சிறு பத்திரிகையானாலும் அது பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தையே கலக்கிவிட்டது. சிறு உளி பெரு மலையை உடைப்பதுபோல அது ஆட்சியாளர்களின் அடிவயிற்றிலே வெடி

வைத்துவிட்டது. எனவே அதனை உடனே பிரெஞ்சு அதிகாரிகள் தடை செய்துவிட்டார்கள்.

ஆயினும் கியுயன் பத்திரிகை வெளியிடுவதை நிறுத்தவில்லை. அதனை இரகசியமாக அச்சிட்டு வெளிக்கொணர்ந்தார். ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு கொண்ட மாலுமிகள் அந்தப் பத்திரிகையின் பிரதிகளை மிக தந்திரமாக மறைத்து எடுத்துச் சென்று, ஒவ்வொரு பிரெஞ்சுக் காலனியிலும் பரப்பினார்கள். இந்தோ-சீனாவிற்கும் ஏராளமானப் பிரதிகள் வந்தவண்ணமிருந்தன. அவற்றை வியட்னாம் மக்கள் இரகசியமாக வாங்கி, மிகுந்த ஆர்வத்தோடு படித்தனர். இதன்மூலம் கியுயனின் பெயர் இந்தோ-சீனம் முழுவதும் படப்புத் தீபோல பரவிற்று.

பத்திரிகைக்கு அவரது சொந்த நாட்டிலிருந்து பல தேசபக்தர்கள் இரகசியமாக பணம் அனுப்பி வைத்தார்கள். பிரான்சிலேயும் கூட பல மத்தியதரவர்க்க இளைஞர்களும், மாணவர்களும் 'பரியா' பத்திரிகையின் அபிமானிகளாக இருந்தார்கள். ஆனால் அந்தப் பத்திரிகையை பகிரங்கமாக ஆதரிக்க அவர்களுக்கு பயம். காரணம் பரியா பத்திரிகையை கையில் வைத்திருந்தால் போதும். அவர்களுக்கு காராக்கிரகம் நிச்சயம் என்ற பயங்கர அடக்குமுறை அப்போது தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. ஆகவே இரண்டாம் பேர்களுக்குத் தெரியாமல் இந்த இளைஞர்கள் பத்திரிகைக்குப் பண உதவி செய்துகொண்டிருந்தார்கள்.

ஒரு சமயம் புய் குவாங் சியூ என்பவரின் மகன் 'பரியா' பத்திரிகை காரியாலயத்திற்குள் நுழைந்து, 'இது பத்திரிகைக்கு என் நன்கொடை' என்று கூறி 5 பிராங்குகளை மேஜையின் மீது வைத்துவிட்டு, திரும்பிப் பார்க்காமல் ஒரே ஓட்டமாக ஓடிவந்து விட்டான். இந்த புய் குவாங் சியூ வியட்னாமிலேயே ஒரு பெரிய கோடீஸ்வரர்; பிரெஞ்சு ஆட்சியின் சுமைதாங்கிகளிலே முக்கியமானவர். அத்தகைய ஒருவரின் புத்திரனைக்கூட பரியா வெகுவாகக் கவர்ந்து விட்டது. ஆகவேதான் பிறருக்குத் தெரியாமல் 5 பிராங்குகளை மேஜையின் மீது வைத்துவிட்டு தலைவிரிகோலமாக அன்று அவன் ஓடிப் போனான்!

இவ்விதம் 'பரியா' பிரெஞ்சு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஒரு வலிமை மிகுந்த ஆயுதமாக விளங்கிற்று!

ஙிகுயன் டாரிசில் இருந்தபோது பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். அந்தச்சமயம் சோஷலிஸ்ட் கட்சியின் சரித்திரப் பிரசித்திப்பெற்ற 'டூர்ஸ் காங்கிரஸ்' நடைபெற்றது.

இந்த காங்கிரஸில் ஒரு மிக முக்கிய பிரச்சினை பற்றி சூடான விவாதம் நடைபெற்றது. சிலர் பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சி இரண்டாவது அகிலத்திலேயே தொடர்ந்து நீடித்திருக்க வேண்டும் என்றனர்; பலர் மூன்றாவது அகிலத்தில் பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சி இணைய வேண்டும் என்றனர்; வேறு சிலர் இரண்டும் வேண்டாம் இரண்டரையாவது அகிலம் அமைக்கப்பட வேண்டுமென்றனர்.

அன்றைய காலகட்டத்தில், பிரெஞ்சு சோஷலிஸ்ட்கட்சியையே அடித்தளம்வரை குலுக்கிய இந்த மிக முக்கிய விவாதத்தில் லியோன் புளும், பால்பாரே, பிரேக், கேச்சின், ஆண்ட்ரே பெர்டன், சார்லஸ்லூங்ஙி, முதலிய பெரும் சோஷலிஸ்ட் தலைவர்கள் கலந்து கொண்டனர். இளம் காளையான ஙிகுயனும் இந்த விவாதத்தில் பங்கு கொண்டு பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சி மூன்றாவது அகிலத்தில் சேருவதைஆதரித்துப் பேசினார்; இந்தோ-சீனம் பிரெஞ்சு ஆட்சியின் கீழ்படும் சொல்லொண்ணா துயரங்களைக் கண்ணீர் மல்க எடுத்துக்கூறினார். அவரது பேச்சு காங்கிரசிலிருந்த பலரை வெகுவாகக் கவர்ந்துவிட்டது.

மறுதினம் 'மார்னிங் போஸ்ட்' என்னும் பத்திரிகை அவரது புகைப் படத்தையும் பிரசுரித்து, உணர்ச்சிக் கரைபுரண்டோடும் பிரசங்கத்தையும் வெளியிட்டுவிட்டது. அவ்வளவுதான், அடுத்த நாளே பிரெஞ்சு இரகசிய போலீஸார் அவரைக் கைதுசெய்ய வந்துவிட்டார்கள். ஆனால் பிரெஞ்சு சோஷலிஸ்ட் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் தலையிட்டு, அவரைக் கைது செய்ய போலீஸார் காங்கிரஸ் கூட்டத்திற்குள் நுழைவதைத் தடுத்துவிட்டார்கள்.

பிறகு பலநாள் கடுமையான விவாதத்திற்குப் பிறகு காங்கிரஸில் ஓட்டெடுக்கும் நேரம் வந்தது. புளும் தலைமையில் சிறுபான்மையினர் இரண்டாவது அகிலத்தை ஆதரித்து வாக்களித்தனர். கேச்சின் தலைமையில் இருந்த பெரும்பாலோர் மூன்றாவது அகிலத்தை ஆதரித்து ஓட்டளித்தனர். ஙிகுயனும் மூன்றாவது அகிலத்திற்கு ஆதரவாகவே ஓட் செய்தார்.

இந்த நெருக்கடி மிகுந்த காங்கிரஸுக்குப் பிறகு பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சி இரண்டாகப் பிளந்துவிட்டது. பெரும்பான்

மையோர் சோஷலிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறி, கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்து, மூன்றுவது அகிலத்தில் இணைந்தனர். சிறு பான்மையினர் சோஷலிஸ்ட் கட்சி என்ற பெயரிலேயே, இரண்டாவது அகிலத்தில் தொடர்ந்து நீடித்திருக்க முடிவு செய்தனர்.

'டூர்ஸ் காங்கிரஸ்' முடிந்ததும் கிருயன் பாரிஸ் திரும்பினூர். பழையபடியே புகைப்படத் தொழிலில் ஈடுபட்டு, எஞ்சிய நேரங்களில் புஸ்தகங்கள் படிப்பதும், பொதுக்கூட்டங்களில் பேசுவதும் 'பரியா' பத்திரிகையை தொடர்ந்து நடத்துவதுமாக இருந்தார். இந்தச் சமயம் அவருக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டது. அதாவது வியட்னுமுக்கே சென்று சுதந்திர இயக்கத்தைக் கட்டி வளர்த்தால் என்ன என்று நினைத்தார்.

ஆனுல் அன்று வியட்னுமில் இருந்த நிலையோ படுபயங்கரமாக இருந்தது. பிரெஞ்சுக்காரர்களின் ஈவு இரக்கமற்ற கொடுங்கோல் ஆட்சியில் 'ஊம்' என்ருல் சிறைவாசமும், 'உம்' என்ருல் வனவாசமுமாக இருந்தது. சுதந்திரம் எனது பிறப்புரிமை என்று சொன்ன குற்றத்திற்காக பல இளைஞர்களின் தலைகள் தரையிலே பனங்காய்களைப்போல பிரெஞ்சு இரத்த வெறியர்களால் சீவி எறியப்பட்டன.

இத்தகைய ஒரு கோரக்கொடுமை மிகுந்த நிலை இந்தோ-சீனத்தில் நிலவுகிறது என்று தெரிந்தும் கிருயன் தாய்நாடு திரும்பும் தன் எண்ணத்தை மாற்றிக் கொள்ளவில்லை. சுதந்திர தாகம் கொண்டவர்களுக்கு உயிர் வெல்லமல்லவல்லவா? ஆகவே, என்ன நேரினும் சரி சொந்த தேசத்திற்குப் புறப்படுவது என்று முடிவு செய்துகொண்டார்.

ஒரு சனிக்கிழமை. அடுத்த வாரப் பத்திரிகையில் என்ன கட்டுரைகளைப் பிரசுரிப்பது என்பது சம்பந்தமாக வழக்கமாக விவாதிக்க மொராக்கோ, அல்ஜீரிய மடகாஸ்கர் தோழர்கள் பரியா பத்திரிகை காரியாலயத்துக்கு வந்தனர். ஆனுல் காரியாலயம் என்றுமில்லாதபடி மூடப்பட்டிருப்பதைக் கண்டு அனைவரும் திகைத்துவிட்டனர்.

"கிருயன் எங்கே போயிருப்பார்?"

"ஏதாவது உடம்பு அசௌகர்யமாக இருக்குமா?"

"இருக்காது. அப்படி இருந்தால் நமக்குத் தகவல் கொடுத்திருப்பாரே!"

"போலீஸ் அவரை கைது செய்திருக்குமோ?"

"சாத்தியமில்லை. அவர்மீது கைவைக்க போலீசுக்குத் துணிச்சலேது?"

"ஒருவேளை பி வீட்டிற்குப் போயிருக்கலாம். அங்கு போய் பார்ப்போம்."

தோழர்கள் அனைவரும் நெஞ்சிலே கவலை குமுற, பரபரப் போடு பி யின் வீட்டை அடைந்தனர். அங்கு அவர்கள் கண்ட காட்சி மேலும் அவர்களது உள்ளத்தை சுட்டெரிப்பதாக இருந் தது. பி யும் அவரது மனைவியும் ஏதோ பேயறைந்தவர்கள்போல் துயரமே உருவாகி உட்கார்ந்திருந்தனர். அவர்களது இரண்டு குழந்தைகளும் உச்சஸ்தாயியில் அழுதுகொண்டிருந்தன. பி ஆண்டி பெசிலிருந்து வந்து பாரிசிலே வழக்கறிஞராக பணியாற்றுபவர்.

"என்ன சமாச்சாரம்?" என்று துடிதுடிப்போடு கேட்டனர் தோழர்கள்.

பி பேசாமல் மேஜை மீதிருந்த ஒரு கடிதத்தைச் சுட்டிக்காட் டினார். உடனே ஒரு மொராக்கோ டாக்டர் தாவிச்சென்று அந்தக் கடிதத்தை எடுத்து உரக்க வாசித்தார். அதில் ஙியுயன் பின்கண்ட வாறு எழுதியிருந்தார்.

அன்பு நண்பர்களே,

"நாமெல்லாம் பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள், நாடுகளைச் சேர்ந்தவர்கள், மதங்களைச் சேர்ந்தவர்கள் என்று லும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களைப்போலவே கள்ளங் கபடமற்ற நட்புறவு கொண்டிருந்தோம். ஏகாதிபத் தியத்தின் கொடும் இரும்புப் பிடியிலிருந்து நமதருமை தாயகங் கள் விடுதலை பெறவேண்டுமென்ற பொது லட்சியம் நம்மை எல்லாம் இணைத்துப் பிணைத்தது.

இந்த லட்சியப் பாதையில் நாம் ஓரளவு முன்னேறி யுள்ளோம். காலனி நாடுகளின் லீகும், பரியா பத்திரிகையும் கணிசமான பலன்களை தந்துள்ளன. நமது அனுபவத்தில் இரண்டு பிரான்சுகளைக் கண்டோம். ஒன்று, ஏகாதிபத்திய இறுமாப்பும், அடக்கி ஒடுக்கும் அகந்தையும், சுரண்டும் வெறியும் கொண்ட பிரான்ஸ். இன்னொன்று எல்லோருக்கும் சுதந்திரம், சமத்துவம், சமாதானம் என்று முரசறையும் உழைப்பாளி மக்களைக் கொண்ட ஜனநாயக பிரான்ஸ். இந்த பிரான்ஸ்தான் உண்மையான பிரான்ஸ். இதனை நமக்காதர வாகத் தட்டி யெழுப்புவதில் பெரிய அளவுக்கு வெற்றி கண் டுள்ளோம்.

இனி அடுத்து என்ன ? இந்தக் கேள்வி அடிக்கடி என் நெஞ்சிலே அலைமோதியது. இதற்குப் பதில் என்ன என்று என் உள்ளத்தைத் துருவித் துருவிப் பார்த்தேன். "உன் நாட்டுக்குப் போ ; உன் நாட்டு மக்களோடு இரண்டறக் கலந்து, அவர்களது வாழ்வோடு வாழ்வாய், மூச்சோடு மூச்சாய் இணைந்து பிணைந்து பணியாற்று ; அவர்களை ஒற்றுமைப் படுத்து ; விழிப்படையச் செய் ; சுதந்திரப் போராட்டத்திற்காக அவர்களை ஒன்றுதிரட்டு" இவ்விதம் இதயத்தின் அடி ஆழத்திலிருந்து பதில் வந்தது.

ஆகவே தாய்நாடு செல்கிறேன். இந்தக் கடிதம் உங்களுக்குக் கிடைக்கும்போது நான் பிரான்சைவிட்டு வெளியேறி 24 மணி நேரம் ஆகியிருக்கும். போய் வருகிறேன் என்னருமைத் தோழர்களே ! அடிமைச் சங்கிலிகளை நொறுக்கி எறிந்து விடுதலை பெற்ற சுதந்திர வீரர்களாக நாம் மீண்டும் சந்திப்போம்.

என் பிரியமிகுந்த அலைஸுக்கும், பாலுக்கும் ஒரு வார்த்தை. என் சின்னஞ்சிறு செல்வங்களே, நீங்கள் என்னை அன்போடு நேசித்தீர்கள். நானும் உங்களை உயிரினும் இனிமையாக நேசித்தேன். இனி நீங்கள் என்னை நீண்ட காலத்திற்குக் காண முடியாது. என் முழங்காலிலும், முதுகிலும் ஏறி விளையாட முடியாது. எனினும் ஒருநாள் நாம் மீண்டும் சந்திப்போம். உங்கள் பாடங்களை நன்கு படித்து வாழ்க்கையில் முன்னேறுங்கள். உங்கள் சிறிய நாய் மாரியலை அடிக்காதீர்கள். நீங்கள் பெரியவர்களானதும் உங்கள் பெற்றோர்களைப்போல உங்கள் மாமா நிகுயனைப்போல உங்கள் நாட்டிற்காகப் போராடுங்கள்.

என் சின்னஞ் சிறு சிட்டுக் குருவிகளே உங்களுக்கு என் அன்பு முத்தங்கள்."

மாமா நிகுயன்.

இந்தக் கடிதத்தைப் படித்தும் டாக்டர் ஸ்தம்பித்து நின்றுவிட்டார். எல்லோரின் கண்களிலும் நீர்த்துளித்து நின்றது.

"அம்மா, என் மாமா எங்கே அம்மா?" என்று அலறினான் பால்.

"மாமா எப்போது வருவார் அப்பா?" என்று கதறினாள் அலைஸ்.

"உங்கள் மாமாவின் தேசம் சுதந்திர மடைந்ததும் மீண்டும்

அவர் வருவார் என் கண்மணிகளே" என்று அவர்களை கட்டியணைத்து கண்ணீர் பெருக்கினார் பி!

## 8

பிரான்சிலிருந்து புறப்பட்ட கியுயன் வியட்னாமிற்கு வருவதற்கு முன் தென் சீனாவிலே காண்டன் முதலிய இடங்களிலே சிறிது காலம் தங்கினார். இப்போது அவரது பெயர் சோங்-மோன்-சோ! முன் பின் தெரியாத அந்த நாட்டில் வாழ்விற்கு ஏதாவது வழி செய்துகொள்ள வேண்டுமல்லவா? இதற்காக தெருத் தெருவாக சென்று சிகரெட்டுகளும், பத்திரிகைகளும் விற்றார். இதிலிருந்து கிடைத்த சொற்ப வருமானத்தை வைத்து, கையுக்கும் வாய்க்குமாக கஷ்ட ஜீவனம் செய்துகொண்டு, அதே சமயம் தாய்நாட்டின் விடுதலைக்கான சுதந்திர இயக்கத்திலேயே தனது முழுமுதல் கவனத்தையும் செலுத்திவந்தார்,

அப்போது சீனத்தில், ஊழல் ஊதாரித்தனம் மிகுந்த மஞ்சு ஆட்சியை ஒழித்து மக்களாட்சியை நிறுவ தேசமெங்கும் பிரம்மாண்டமாக புரட்சி அலை மோதிக்கொண்டிருந்தது. டாக்டர் சன்யாட்சென் தலைமையில் கோமின்டாங் ஸ்தாபனம் காடு நகரம், பட்டி தொட்டிகள், மூலை முடுக்குகளிலெல்லாம் சுதந்திர சங்கநாதம் செய்துகொண்டிருந்தது.

இந்த ஜனநாயக உரிமை முழக்கம் சோங்-மன்-சோவுக்கு மேலும் உத்வேகம் அளித்தது. சீனத்தின் புரட்சியால் உந்தப்பட்ட அவர், அளவற்ற உற்சாகமடைந்து, சீனாவிலிருந்த வியட்னாம் தேசபக்தர்களையெல்லாம் ஒன்று திரட்டி புரட்சிகர வியட்னாம் இளைஞர்கள் என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். இது தவிர, "ஒடுக்கப்பட்ட ஆசிய மக்களின் லீக்" என்ற சங்கத்தையும் நிறுவினார். வியட்னாமின் சுதந்திரத்தை வற்புறுத்தவும், ஆசிய மக்கள் அடிமைத்தனத்திலிருந்து விறிட்டெழவும் 'இளைஞன்' என்ற பத்திரிகையையும் நடத்தினார்.

தென்சீனாவில் இவ்விதம் சோங்-மன்-சோ கிளப்பிவிட்ட புயல் நாடு கடந்து, காடு கடந்து, மலை கடந்து, மமதையாளர்களின் தடை கடந்து வியட்னாமிற்குள்ளும் சுழன்றடிக்க ஆரம்பித்தது. 'இளைஞன்' பத்திரிகையும், இன்னும் ஆயிரக்கணக்கான பிரசுரங்களும் கியுயனின் பாசறையிலிருந்து இரகசியமாகப் புறப்பட்டு, வெடிகுண்டுகளைப் போல பிரெஞ்சு ஆட்சி பீடத்தை கிடுகிடுக்க வைத்தன.

இது மட்டுமல்ல. சீன எல்லையில் குவாங் சோவில் ஒரு விடுதலை இயக்கப் பயிற்சி முகாமையே சோங்-மன்-சோ ஸ்தாபித்தார். இந்தச் செய்தி எட்டியதும் வியட்னுமிலிருந்து ஆயிரக்கணக்கான மாணவர்களும், இளைஞர்களும் பிரெஞ்சு அதிகாரிகள் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, இந்த முகாமில் வந்து பயிற்சி பெற்றனர். பெற்றதும் உள்ளத்திலே தேசபக்தக் கனல் கொழுந்து விட்டெரிய இந்தோ-சீனுவுக்குத் திரும்பிவந்து, நாட்டிலே எட்டுத் திசையிலும் சுதந்திர இயக்கப் பெரு நெருப்பை மூட்டினுர்கள். இதனைக் கண்டுபிரெஞ்சு அதிகாரவர்க்கம் அலறிப்புடைத்தது; சோங்-மன்-சோ-வை எப்படியும் பிடித்துவிட வேண்டுமென்று துடிதுடித்தது.

இந்த நிலையில் சீனவிலே ஒரு துரதிருஷ்ட சம்பவம் நடந்தது. ஜனநாயகப் புரட்சி அங்கு வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கையில் டாக்டர் சன்யாட்சன் இறந்துபோனுர். உடனே பதவி உன்மத்தம் கொண்ட பாசிஸ்ட் ஜடாமுனி சியாங்கே-ஷேக் கோமின்டாங் ஸ்தாபனத்தை ஒரு கடைந்தெடுத்த பிற்போக்கு ஸ்தாபனமாக மாற்றி கம்யூனிஸ்ட்கள்மீதும், ஜனநாயக சக்திகள்மீதும் மூர்த்தன்யமான தாக்குதலைத் தொடுத்தான்.

சோங்-மன்-சோவின்மீதும் அவனது விஷக் கண்கள் பாய்ந்தன. அவனது கொலைப் படைகள் அவரைக் கைது செய்ய முயன்றன. ஆனல் சோங்-மன்-சோ சீனவை விட்டு வெளியேறி சயாமுக்குள் (தாய்லந்து) நுழைந்தார்.

தேச விடுதலையையே உயிர்மூச்சாகக்கொண்ட எவரும், எங்கு சென்றுலும் சும்மா இருக்க முடியுமா? அதுவும் சோங்-மன்-சோ வால் ஒருகணம்கூட தன் தாயகத்தைப்பற்றி சிந்திக்காமல், செயல்படாமல் இருக்கமுடியவில்லை.

ஆகவே அவர்சயாம் மண்ணில் காலடி எடுத்து வைத்ததும், மேனும் நதிக்கருகே வியட்னுமியர்கள் அதிகம் வசிக்கும் ஒரு கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஒன்றை நிறுவினுர். பகல் முழுவதும் இந்தப் பள்ளிக்குப் பாடம் கற்றுக்கொள்ள பல மாணவர்கள் வருவார்கள்; சோங்-மன் சோவும் அவர்களுக்கு புன்முறுவலோடு, இன்மொழியோடு பாடம் கற்றுக் கொடுப்பார்.

ஆனல் இரவானதும் இந்தப் பள்ளிக்கூடம் விடுதலை இயக்கத்தின் தளமாக, போர்க்களமாக ஆகிவிடும். சுற்றுப்புறங்களிலிருக்கும் வியட்னுமியர்களெல்லாம் அங்கு குழுமி விடுவார்கள். அப்போது சோங்-மன்-சோ உள்ளமுருகப் பேசி அந்த மக்களின் நெஞ்சங்களில் சுதந்திர வாஞ்சையை நாட்டி விடுவார்.

இதனால் அந்தப் பகுதியிலே ஒரு புதிய மாறுதல் தென்பட்டது; ஒவ்வொரு வியட்னமியரின் உதட்டிலும் விடுதலை கீதம் முழங்கிற்று. இந்தச் செய்தி பிரெஞ்சுக்காரர்களுக்கு எட்டவே, சயாம் போலீஸ் மூலம் சோங்-மன்-சோவை வேட்டையாடக் கிளம்பினர்; அவரை எப்படியாவது பிடித்துவிட வேண்டுமென்று சயாம் முழுவதும் வலைபோட்டுத் தேடினர். ஆனால் அந்த மாய மனிதர் இவர்களது கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, இரகசியமாக வியட்னமுக்குள்ளேயே நுழைந்து விட்டார்!

இந்தத் தகவல் பிரெஞ்சு ஆட்சியாளர்களுக்கு எட்டியதும் கதி கலங்கிப் போய்விட்டார்கள். சோங்-மன்-சோவை இனியும் நாட்டுக்குள் அனுமதித்துக்கொண்டிருந்தால், வெடி மருந்துக் கிடங்குக்குள் தீப்பந்தத்தை வைப்பது போலாகிவிடும் என்று பீதியடைந்து, அவரது தலைக்கு விலை வைத்தார்கள்; மரண தண்டனை விதித்தார்கள்; அவரை உயிரோடோ அல்லது பிணமாகவோ கொண்டு வந்து ஒப்படைத்தால், பெருந்தொகை பரிசாகக் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். பிரெஞ்சு போலீஸ், ராணுவ யந்திரம் முழுவதும் முடிக்கி விடப்பட்டு, அவரை பிடிக்கும் வேலையில் முழு மூச்சாக இறங்கினார்கள். இந்த வேட்டை படுபயங்கரமடையவே சோங்-மன்-சோ மீண்டும் சயாமுக்குச் சென்றார். அந்நாட்டின் தலைநகரமான பாங்காக்கில் இரண்டாண்டுகள் தங்கியிருந்தார்.

இந்த இரண்டாண்டு காலம் பிரெஞ்சு அதிகாரிகளுக்குக் கொஞ்சம் நிம்மதியளித்தது. சோங்-மன்-சோ தொலைந்தான் என்று அவர்கள் அகமகிழ்ந்து கொண்டிருக்கும் வேளையில், திடீரென்று இந்தோ சீன அரசியல் அரங்கிலே ஒரு புதிய மனிதர் தோன்றினார். அவர் பெயர் டான்தான்.

அவர் தேசத்திலுள்ள இளைஞர்களையெல்லாம் ஒன்று திரட்டி, வீடுகள்தோறும், வீதிகள்தோறும் நாட்டுப் பற்றையும், சுதந்திர வேட்கையையும் கிளப்பினார். 'வெள்ளையனே வெளியேறு' என்ற போர்க்கோஷத்தை எழுப்பினார். இப்படி சுதந்திர முழக்கம் செய்யும் இந்தப் புது மனிதர் டான்தான் யாரென்று பிரெஞ்சுக்காரர்கள் பார்க்கையில் அவர் வேறு யாருமில்லை, பழைய கியுவன்தான் என்பதை தெரிந்துகொண்டனர்! உடனே அவருக்கெதிராக பிரெஞ்சு போலீஸ் படை முழுவதும் ஏவிவிடப்பட்டது.

இந்த எமகிங்கிலியர்களான பிரெஞ்சு ஆட்சியாளர்களின் கையில் சிக்கி விடாமலிருப்பதற்காக, கியுவன் ஹாங்காங்குக்குப் புறப்பட்டார்.

ஹாங்காங்கில் பல்வேறு வியட்னும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய மகாநாட்டை நிகுயன் கூட்டினார். எல்லா கட்சிகளும் ஐக்கியப்பட்டு பிரெஞ்சு காலனி ஆதிக்கத்திற்கெதிராக, ஒன்றுபட்ட உறுதியான போராட்டம் நடத்தவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்த மகாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஹாங்காங் பிரிட்டிஷ் அதிகாரிகள் அவரை கைது செய்து வெஞ்சிறையிலே தள்ளினர். சிறையிலே அவர்பட்ட வேதனைக்கு ஒரு அளவே கிடையாது. காற்றும், சூரிய ஒளியும் புகாத குகை போன்ற ஒரு பயங்கர இருட்டறையிலே அவர் தன்னந் தனியாக வைக்கப்பட்டிருந்தார். ஒரு நாளைக்கு 15 நிமிடங்கள்தான் அறைக்கு வெளியே சற்று உலாவ அழைத்துச் செல்லப்படுவார். மற்றபடி எஞ்சிய நேரமெல்லாம் இரவும் பகலும் அந்த ஜெயிலிலேதான் அடைபட்டுக் கிடக்கவேண்டும்.

அது தவிர அந்த அறையிலே ஒரே மூட்டைப் பூச்சி, கொசுக்கள் மயம். அழுகிப்போன பிணத்தை கழுகுகள் கொத்திக் குளறி உண்ணுவதுபோல, இரத்தம் உறிஞ்சும். இந்த ஜந்துக்கள் அவரை பிடுங்கி தின்று படாதபாடு படுத்திவிட்டன. இந்நிலையிலே அவருக்கு எப்படி தூக்கம் வரும்? ஒவ்வொரு தினமும் அவருக்கு வைகுண்ட ஏதாதசிதான்; தூக்கத்தைக் கண்டு அவரது கண்கள் பல நாட்களாகிவிட்டன. இவ்விதம் அமைதியான நித்திரையின்றி அலைக்கழிந்து. மணிக்கணக்காக என்னென்னமோ பற்றி சிந்தனை செய்வார். கடந்த காலத்தையும் எதிர் காலத்தையும் பற்றி யோசிப்பார். கடைசியில் இந்தச் சிந்தனையிலும் அலுப்பு ஏற்பட்டுவிடவே, அறையின் தளத்தில் எத்தனை செங்கல்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன, மேற்கூறையில் எத்தனை ஓடுகள் அடுக்கப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் எண்ண ஆரம்பித்துவிட்டாராம்!

இது இப்படியென்றால் அவருக்குக் கொடுக்கப்பட்ட ஆகாரமோ ஒரு நாய்க்குக்கூட இவ்வளவு மோசமான உணவைக் கொடுக்கமாட்டார்கள். அந்த அளவுக்கு, பார்த்தாலே அடி வயிறு கலக்க குமட்டல் எடுக்கும், மட்டமான சாதம் கொஞ்சமும், சகிக்க முடியாத நாற்றமெடுக்கும் ஒன்றிரண்டு மீன் துண்டுகளும் தினம் இரண்டு வேளை கிடைக்கும். இவ்விதம் பல வாரங்கள் நரக வேதனையிலும் கொடிய சித்திரவதை பட்டுக்கொண்டிருந்தார் நிகுயன்.

இதனால் அவரது தேக நலம் பெரிதும் பாதிக்கப்பட்டது. பயங்கர க்ஷயரோகம் அவரைப் பீடித்து அணு அணுவாக உயிரை கவர்ந்து கொண்டிருந்தது. இங்கிலையிலே பிரிட்டிஷார் அவரை பிரெஞ்சுக்காரர்கள் கையில் ஒப்படைத்துவிட சதி செய்துகொண் டிருந்தார்கள். இதற்காக அவர்மீது இல்லாத பொல்லாத குற்றச் சாட்டுகளை சுமத்தி, ஒரு விசாரணை " நாடகம் " நடத்தினார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் கியுயன் ஆதரிப்பாரற்ற தனி மனிதனாகி விடவில்லை. அவர்மீது பிரிட்டிஷார் அபாண்ட வழக்குத் தொடர்ந் திருப்பதையும், அவரை பிரெஞ்சுக்காரர்களிடம் ஒப்படைக்க சூழ்ச்சி செய்வதையும் எதிர்த்து லண்டனிலும், பிரான்சிலும் பல ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அதோடு அவர் சார்பில் வாதாட லாஸ்பி என்னும் ஜனநாயக உள்ளம் படைத்த பிரபல பிரிட்டிஷ் வழக்கறிஞர் முன்வந்தார்.

வழக்கு பல தினங்கள் தொடர்ந்து நடைபெற்று தீர்ப்புக் கூறப்பட்டது. இதனை விசாரித்த நீதிபதி கியுயன் நிரபராதி என்று தீர்ப்பளித்தார். ஆனால் அதே சமயம் கியுயன் ஹாங்காங்கி லிருந்து ஒரு பிரெஞ்சுக் கப்பலில் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் உத்திரவிட்டார். இந்த உத்திரவில்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சி அடங்கியுள்ளது. பொதுஜன அபிப் பிராயத்துக்குப் பயந்து அவரை விடுதலை செய்வதுபோல் செய்து, பிரெஞ்சுக்காரர்களின் கொடூர வேட்டைக்கு அவரை பலியிடுவதே இந்த உத்திரவின் உள்நோக்கம்.

இந்த பயங்கர சதியை லாஸ்பி நன்கு தெரிந்துகொண்டு லண்டன் ஹைகோர்ட்டுக்கு இந்த உத்திரவை எதிர்த்து ' அப்பீல் ' செய்தார். இந்த அப்பீல் வழக்கில் கியுயன் சார்பில் திறமையுடன் வாதாட பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் பிரபல தலைவரான ஸ்டாபோர்ட் கிரிப்ஸையும் ஏற்பாடு செய்தார். இந்த கிரிப்ஸ்தான் பின்னர் பிரிட்டிஷ் மந்திரியாக பதவி வகித்தார் என்பது அனைவரும் அறிந்ததே.

கிரிப்ஸின் அசைக்க முடியாத ஆணித்தரமான வாதத்தின் முன்பு ஹாங்காங் அதிகாரிகளின் பொய்க் குற்றச்சாட்டுகளெல் லாம் தவிடுபொடியாயின. கியுயன் குற்றமற்றவர்; அவர் சோவியத் ஏஜண்ட் என்பதற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது; ஹாங்காங் ஆட்சியை கவிழ்க்க சதி செய்தார் என்பதற்கு சிறிதளவேனும் ருசுக்கள் இல்லை ; அவர் ஒரு கம்யூனிஸ்டாகவோ அல்லது ஒரு தேசியவாதியாகவோ இருக்கலாம். அதற்காக அவர் இங்கிலிஷ் சட்டத்தை மீறியவர் என்று கூறிவிட முடியாது. இவ்விதம்

லண்டன் உயர்நீதிமன்றம் தீர்ப்புக்கூறி ஹாங்காங் நீதிபதியின் உத்திரவை ரத்து செய்தது.

எனினும் தொல்லை இத்துடன் தீர்ந்துவிடவில்லை. கிருயன் ஹாங்காங்கிலிருந்து எப்போது புறப்படுவார், எப்போது அவரை பிடிப்போம் என்று பிரெஞ்சு இரகசியப் போலீஸ் புலிகள் இரவும் பகலும் அவரைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். இங்கிலையில் பிரிட்டனுக்கு செல்வதற்கு அனுமதி கோரி வழக்கறிஞர் லாஸ்பி மூலம் லண்டனுக்கு மனு செய்திருந்தார். இந்த மனுவிற்கு பிரிட்டிஷ் சர்க்காரின் பதிலை எதிர்பார்க்காமலேயே, இரகசியமாக இங்கிலாந்திற்குக் கப்பலேறிவிட்டார்.

ஆனால் பிரிட்டிஷ் போலீஸார் சிங்கப்பூரில் அவரை கைது செய்து திரும்பவும் ஹாங்காங்கிற்கே அனுப்பிவிட்டனர். பிரயாண அனுமதிச் சீட்டின்றி சிங்கப்பூருக்குள் நுழைந்தார் என்று இந்த நடவடிக்கைக்குக் காரணம் காட்டப்பட்டது. இந்த சந்தர்ப்பத்திலும் லாஸ்பி தலையிட்டு, அவரை விடுதலை செய்தார்.

எனினும் பிரெஞ்சு இரகசியபோலீஸ் ஏஜண்டுகளின் தொல்லை தீரவில்லை. கிருயனை எங்கு கண்டாலும் அவரை கைது செய்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு அவர்கள் சிறை வாசலின் முன்னும், லாஸ்பியின் வீட்டின் முன்னும் பழியோபழி என்று இரவும் பகலும் முற்றுகை போட்டுவிட்டார்கள்.

இங்கிலையில் லாஸ்பி ஒரு தந்திரம் செய்தார். கிருயனை ஒரு பெரிய சீன வியாபாரிபோல வேடமணியச் செய்து, எவரும் சந்தேகப்படாதபடி ஹாங்காங்கிலிருந்து ரொம்பவும் சாமர்த்தியமாக தப்பியோடச் செய்துவிட்டார்!

இந்த விஷயம் பிரெஞ்சுக்காரர்களுக்குப் பின்னால்தான் தெரிந்தது. இது அவர்களுக்குப் பெருத்த அவமானமாகப் போய்விட்டது. சர்வசக்தியையும் பயன்படுத்தி, சர்வ ஜாக்கிரதையாக இருந்தும் கிருயன் தங்கள் வலையை கத்தரித்துக்கொண்டு வெளியேறிப் போய்விட்டாரே என்று அவர்களுக்கு ஒரே தலையிறக்கமாகப் போய்விட்டது. இந்த மூக்கறுப்பை மறைக்கவும், இந்த சீன தேசிய இயக்கத்தை முனை மழுங்க வைக்கவும் அவர்கள் திட்டமிட்டு ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டார்கள். அதாவது சிறையில் கடுமையான க்ஷய ரோகத்தால் கிருயன் இறந்துவிட்டார் என்று கதை கட்டிவிட்டார்கள்.

109002

கிருயனின் நெருங்கிய நண்பர்களுக்கு, இந்த வதந்தியில் சிறிதுகூட உண்மை இல்லை என்பது தெரியும். ஆயினும் சர்வதேசப் போலீஸின் கழுகுப் பார்வையிலிருந்து கொஞ்ச காலமாவது அவர்

விம்மதியோடு ஓய்வு எடுத்துக்கொள்ளட்டுமே என்று நினைத்து இந்த வதந்தியை மறுக்காது பேசாமல் இருந்துவிட்டார்கள். இதனுல் பிரெஞ்சுக்காரர்கள் கட்டவிழ்த்துவிட்டக் கதை காட்டுத் தீப்போல வெகுவேகமாக இந்தோ சீனம் முழுவதும் பரவிற்று. அநேகர் அவர் மரணம் உண்மைதானென்று மனங் கலங்கினுர்கள்; இந்தோ சீன விடுதலை இயக்கம் இத்தகைய ஒரு மாபெரும் வீரரை இழந்ததே என்று அழுது புலம்பினுர்கள்.

# 10

கள்ளங் கபடற்ற நட்புறவுக்கு இலக்கணமாக விளங்கிய லாஸ்பியின் உதவியால் ஹாங்காங்கிலிருந்து தப்பிய ஙிகுயன் ஐரோப்பா வந்து சேர்ந்தார். செல்வமும் செல்வாக்கும் படைத்த லாஸ்பியின் நண்பர் ஒருவர் வீட்டிலேயே அவர் தங்கினுர். மிகவும் உடல் நலம் குன்றியிருந்த அவருக்கு சகல வசதிகளும் செய்து தரப்பட்டன. இதனுல் கொஞ்சங் கொஞ்சமாக அவரது தேக நிலை அபிவிருத்தி அடைந்தது. ஏகாதிபத்திய வாதிகளின் விஷக் கண்களில் பட்டுவிடாதபடி ஓய்வு எடுக்க வந்த இடத்திலும்கூட அவருக்கு சர்வசதாவும் தன் நாட்டைப் பற்றிதான் சிந்தனை. அங்கிருந்த வண்ணமே விதம்விதமான புனைப்பெயர்களில் பல பத்திரிகைகளுக்கு இந்தோசீன சுதந்திரப் போராட்டம்பற்றி கட்டுரைகள் எழுதி அனுப்பிக்கொண்டிருந்தார். அதோடு நற்றவானிலும் நனிசிறந்த பிறந்த பொன்னுட்டிற்கு மீண்டும் முழுசக்தியோடு தொண்டாற்றும் சாதகமான சந்தர்ப்பத்தை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்தச் சமயம் இரண்டாவது மகாயுத்தம் வெடித்தது. இதுதான் பொறுப்பான கட்டம், பொன்னுன நேரம் என்று திடீரென்று ஙிகுயன் வியட்னுமில் தோன்றினுர். மாண்டு போய் விட்டார் என்று நினைத்திருந்த மாபெரும் தலைவரை திரும்பவும் தங்கள் மத்தியில் பார்த்ததும் மக்களிடையே என்றுமில்லாத உற்சாகம் கரை புரண்டோடியது; கண்களிலே தேங்கியிருந்த நீரை துடைத்துக்கொண்டு, புதிய வலிவும், தெம்பும், திறனும் பெற்று லட்சோப லட்ச வியட்னுமியர்கள் சதந்திரப் போராட்ட வேள்வியிலே அஞ்சா நெஞ்சோடு குதித்தார்கள்.

ஙிகுயன், நாட்டிலிருந்த சகல தேச பக்த சக்திகளையும், கட்சிகளையும் ஒன்று திரட்டி வியட்னும் லீக் என்னும் உருக்கு உறுதி கொண்ட விடுதலை ஸ்தாபனத்தை அமைத்தார். இந்த ஸ்தாபனத்

தின் கொடியின் கீழே அலை அலையாக, ஆயிரம் ஆயிரமாக, மக்கள் அணி திரண்டார்கள். எங்கும் புது உத்வேகம் பீறிட்டது. நாடு, நகரங்கள், கிராமங்கள் தோறும் விடுதலை கமிட்டிகள் அமைக்கப் பட்டன. இவைகளின் சார்பில் தினமும் நூற்றுக்கணக்கான ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. "வியட்னமியர்களே ஒன்று சேருங்கள்! வெள்ளையர்களை வெளியேற்றுங்கள்!" என்னும் கோஷம் மண் ணும் விண்ணும் அதிர எங்கெங்கும் எதிரொலித்தது!

இவ்விதம் சுதந்திர இயக்கம் புது பலமும், திருப்பமும் பெற்று சூடேற, சூடேற, பிரெஞ்சுக்காரர்களின் அடக்குமுறை கொலை வெறியும் எல்லை கடந்தது. இந்த கால கட்டத்தில், இரக்கமில்லாத அரக்க மனம் படைத்த இந்தக் காலனி வாதிகள் செய்த கொடுமைகளும், குரூரங்களும் இருக்கின்றனவே, அப் பப்பா அவற்றை நினைத்தாலே நெஞ்சமும், நரம்பு நாளங்களும் நடுநடுங்குகின்றன. அந்த அளவுக்கு நூற்றுக்கணக்கான கிரா மங்கள் தகர்த்து தரைமட்டமாக்கப்பட்டன; ஆயிரக்கணக்கான மக்கள் துள்ளத் துடிக்க சிரச்சேதம் செய்யப்பட்டார்கள்; ஆண்கள், பெண்கள், பச்சிளம் குழந்தைகள், தள்ளாடும் வயோதி கர்கள் ஆகிய எண்ணற்றோர்களின் கால்களையும் கைகளையும் ஒரு நீண்ட இரும்புச் சங்கிலியால் பிணைத்து, அவர்களனைவரையும் கூண்டோடு கடலிலே தள்ளிக் கொன்றார்கள்; பல இடங்களில் வியட்னம் தேச பக்தர்களை தங்களுக்கான சவக் குழிகளைத் தாங்களே தோண்டச் செய்து, அவர்களை அவற்றில் உயிரோடு தள்ளி புதைத்தார்கள்!

இப்படி எண்ணற்ற மிலேச்சத்தனங்கள், மிருகத்தனங்கள் செய்தும் மக்கள் மனம் தளரவில்லை; ஓராயிரம் கோடி இன் னல்கள் வந்தாலும் ஒடியாத நெஞ்சுரங்கொண்ட மினுயனின் தலைமையில் அவர்கள் உறுதியோடு நின்றார்கள்.

இதற்கிடையே யுத்தப் போக்கில் பல திடுக்கிடும் மாற்றங்கள் நிகழ்ந்தன. அட்லாஸ் மலையே ஆகாயத்திலிருந்து விழுந்தாலும் உடைக்க முடியாது என்று வறட்டு ஜம்பம் அடித்துக் கொள்ளப் பட்ட மாகிளுட் அரணை ஜெர்மானியர் தகர்த்தனர்; பிரான்ஸ் பரிதாபகரமாக தோல்வி அடைந்தது; 150 பிரெஞ்சு தளபதி களும், 20 லட்சம் சோல்ஜர்களும் ஹிட்லரிடம் கைதானார்கள்; பிரெஞ்சு சர்க்கார் நாட்டைவிட்டு ஓட்டம் பிடித்தது; துரோகி களான பெடெயினும், லவாலும் சரணாகதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

பிரான்ஸின் இந்த அவமானகரமான வீழ்ச்சியைப் பயன் படுத்திக்கொண்டு இந்தோ சீனுமீது ஜப்பானியர் தண்டெடுத்து வந்தனர். சுதந்திரம் கோரும் மக்களை சுட்டுக்கொள்ளும் சூரப் புலிகளான பிரெஞ்சு ராணுவத்தினர் ஜப்பானியப் படைக ளிடம் தாக்குப் பிடித்து நிற்க முடியாமல், நெஞ்சிலே உரமின்றி, கோழைத்தனமாக அடிபணிந்தனர்.

அப்போது வியட்னும் மக்களிடம் மட்டும் வீரம் செத்துவிட வில்லை. அதற்குப் பதிலாக, 'இப்போது முதல் நமது முதல் எதிரி ஜப்பானிய பாசிஸ்டுகள்தான்; அவர்களை உடலிலே குருதி உள்ளவரை உறுதியோடு எதிர்த்துப் போராடுங்கள்" என்று சங்கநாதம் செய்தார் மிகுயன்.

உடனே வியட்னும் மக்களை அடக்கி ஒடுக்குவதில் ஜப்பானி யர்களும் பிரெஞ்சுக்காரர்களும் கூட்டுச் சேர்ந்துகொண்டார்கள். எண்ணற்ற தேச பக்தர்களின் தலைகளைக்கொண்டு வருபவர்களுக்கு பல்லாயிரக் கணக்கான பிராங்குகள் பரிசளிக்கப்படுமென்று அறிவித்தார்கள்; இன்னும் பலவகைகளிலும் வீரம் செறிந்த வியட்னும் மக்களை கோரக் கொடுமைகளுக்குள்ளாக்கினுர்கள். ஆனல் மக்கள் சக்தி, அடக்குமுறைகளுக்கும், ஒடுக்குமுறைகளுக் கும், பயமுறுத்தல்களுக்கும், தூக்குமேடைக்கும், துப்பாக்கி முனைக்கும் என்றென்றைக்கும் நிரந்தரமாக அடிபணிந்து போவ தாக சரித்திரம் கிடையாதல்லவா? இதற்கு வியட்னும் மக்கள் மட்டும் என்ன விதிவிலக்கா? ஆகவே அவர்களும் ஜப்பானிய பாசிஸ்டுகளையும், பிரெஞ்சு காலனி வெறியர்களையும் எதிர்த்து மிகுயன் தலைமையில் தீரத்தோடு 'கொரில்லாப்' போராட்டம் நடத்த ஆரம்பித்தார்கள்.

இந்த சமயம், முல்லை மலர் தோட்டத்தில் முட்செடிகளும் இருப்பதுபோல வியட்னுமில், அதிகாரம், பதவி, பட்டம், பணம் முதலிய எலும்புத் துண்டுத் துணுக்குகளுக்கு ஆசைப்பட்ட 'மீர்ஜாபர்களும்', 'குவிஸ்லிங்குகளும்' துரோகிகளும் இல்லாம லில்லை. இவர்கள் காற்றடிக்கும் பக்கம் சாயும் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதிகள். ஆகவே இவர்கள் மிகுயனை சாட ஆரம்பித் தார்கள்.

"எங்கும் ஜெர்மனியும், ஜப்பானும் அமோக வெற்றி பெற்று வருகின்றன. இந்த வேளையிலே இவர் போய் ஜப்பானை எதிர்க்க லாமா? ஜப்பானியர்களது மனங்குளிர நடந்து, நயந்துகொண் டால், அவர்கள் கருணை வைத்து இந்தோசீனுவுக்கு சுதந்திரம் கொடுப்பார்களே" என்று இந்த உத்தமர்கள் உபதேசம் செய்யக் கிளம்பினுர்கள்.

இந்த பாசிஸ்ட் தாசர்களுக்கு விகுயன் சரியான பதில் கொடுத்தார். "ஒரு கூடை செங்கலும் பிடாரிதான். பிறநாட்டு சுதந்திரத்தை மிதித்து துவைப்பதில் பிரான்ஸும் ஜப்பானும் ஒன்று தான். உயிரைக் கெடுக்கும் நஞ்சுகளிலே நல்ல நஞ்சு எங்கேயாவது உண்டா? ஆகவே பிரெஞ்சு காலனி வெறியர்களும், ஜப்பானிய பாசிஸ்டுகளும் நமக்கு ஒரே மாதிரியான விரோதிகள் தான். மேலும் தற்போது தற்காலிகமாக பாசிஸ்டுகள் கை ஓங்கியிருந்தாலும், நேசநாடுகள் இறுதியில் வெற்றியடையப்போவது உறுதி; அதேபோல வியட்னும் விடுதலைப் பெறப்போவதும் சர்வ நிச்சயம்" என்று தீர்க்க தரிசனத்தோடு தெட்டத் தெளிய பகர்ந்தார் விகுயன்.

அவர் கூறியவை எவ்வளவு நூற்றுக்கு நூறு உண்மை என்பதை பின்னால் சரித்திரம் நிரூபித்தது!

# 11

இந்தோ சீனர்களைப் போலவே, அண்டைநாட்டுக்காரர்களான சீனர்களும் ஜப்பானியர்களை எதிர்த்து வீரதீரத்தோடு போராடி வந்தார்கள். ஆகவே இத்தகைய பொதுவான போராட்டத்தில் அவர்களுடன் தொடர்பு கொள்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று வியட்னும் சுதந்திர லீக் முடிவு செய்தது.

ஆனால் இந்தத் தொடர்பை ஏற்படுத்த யாரை அனுப்புவது? வியட்னும் தலைவர்களுள்ளே சீனாவையும், சீன மக்களையும் மிக நன்கு அறிந்தவர்கள் விகுயனைத் தவிர வேறு யாருமில்லை. ஆகவே அவரையே சீனாவிற்கு அனுப்புவது என்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அன்றைய நிலையில் இந்தப் பணி இமயம் போன்றது. ஏனென்றால் சீனத் தலைநகர் சுங்கிங்குக்கு இந்தோ சீனாவிலிருந்து நடந்தே செல்லவேண்டும். இது சாமான்ய காரியமல்ல. எனினும் பெற்றத் தாயினும் பெரிதான தன் நாட்டின் பொருட்டு, இந்தக் கொடுஞ் சோதனையையும் புன்முறுவலோடு ஏற்க அவர் உடன்பட்டார்.

அவர் வாழ்விலேயே பட்டிராத துன்பதுயரங்கள் மிகுந்த இந்த பயங்கரப் பயணம் ஆரம்பமாயிற்று. அங்கெங்கெனாதபடி எங்கெங்குமிருக்கும் இரகசிய போலீசாரின் வேட்டையிலிருந்து

தப்புவதற்காக, அவர் தம் பெயரை ஹோ–சி–மின் என்று மாற்றிக் கொண்டார். இப்படி போலீஸ் மோப்பத்திலிருந்து விடுபடுவதற்காக அன்று அவர் வைத்துக்கொண்ட பெயர் இன்று கோடானு கோடி மக்களின் நெஞ்சங்களிலே நீங்கா வரம் பெற்று நிலைத்து நிற்கும் நிரந்தரப் பெயராகிவிட்டது!

இது இருக்க, 10 இரவும், 5 பகலும், ஊண் உறக்கம், ஓய்வு, உடல் சிரமம்பாராது, இடைவிடாது, கால்கடுக்க, உளம் சோற, நடந்து, நடந்து, நடந்து ஒரு சீன நகரத்துக்கு வந்து சேர்ந்தார். நாள் கணக்காக நடந்துவந்த அலுப்பும், களைப்பும், சோர்வும்தீர கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்வதற்குள்ளாகவே, அன்று மாலையே படுபாவிகள் கோமின்டாங் அதிகாரிகள் அவரை கைது செய்து காவலிலே வைத்தனர்!

இத்துடன் அவருக்கு வர்ணனைக்கு எட்டாத வாதனையும், வேதனையும், சோதனையும் மிகுந்த காலம் ஆரம்பமாயிற்று. சிறையிலே பகல் முழுவதும் சுமக்க முடியாத ஒரு பெரிய இரும்பு கலாடத்தை அவர் கழுத்திலே மாட்டி யிருப்பார்கள். இரவானதும் கைகளையும், கால்களையும் சங்கிலியால் பிணைத்து விடுவார்கள். இத்தனைக்கும் அந்த ஜில்லாவின் அதிகாரியை அவருக்குத் தெரியும். ஆயினும் அந்தத் திமிர்பிடித்த கோமின்டாங் அதிகாரி அவரைப் பார்க்க மறுத்துவிட்டான். அதுமட்டுமின்றி சுங்கிங்கிலுள்ள மேலதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட பல தந்திகளுக்கும் எவ்விதப் பதிலுமில்லை.

கடைசியில், ஒன்றரை மாதங்களுக்குப் பிறகு, துப்பாக்கிகள் சகிதம் 6 சோல்ஜர்கள் வந்து, சிறையிலிருந்த அவரை எங்கோ அழைத்துச் சென்றனர். கைகள் இரண்டிலும் விலங்கு மாட்டப்பட்டு, அவை ஒரு நீண்ட சங்கிலியால் கால்களோடு இணைக்கப் பட்டிருந்தன. இந்தக் கோலத்தோடேயே கொட்டும் மழையிலும், வெட்டும் மின்னலிலும், தகிக்கும் வெயிலிலும், கருவறுக்கும் பனியிலும் காட்டையும், மேட்டையும், மலைகளையும், மடுக்களையும் கடந்து நாட்கணக்கில் நடந்து சென்றுகொண்டே இருந்தார்!

ஒவ்வொரு தினமும் அதிகாலையில் கோட்டான் கூவுவதற்கு முன்பே கோமின்டாங் சோல்ஜர்கள் அவரை எழுப்பி நாள் முழுவதும் நடத்திச் செல்வார்கள்; இருட்டானதும் எங்கேயாவது ஒரு கிராமத்தில் தங்குவார்கள். சோல்ஜர்கள் சுகத்தோடு தூங்குவதற்கு வழி தேடிக்கொண்டு எங்கேயாவது ஒரு மூலையில் ஒரு பாழடைந்த அறையில், வைக்கோலை பரப்பி, அதில் கைவிலங்குகளைக் கழற்றாமலேயே ஹோ-சி-மினை தூங்கும்படி பணிப்பார்கள்.

எந்த மனித ஜீவனும் சகிக்க முடியாத, அனுபவிக்க முடியாத இத்தனை மலைபோன்ற கஷ்டங்களுக்கிடையேயும் நிலைகுலையாமல், எப்போதும்போல புன்முறுவலோடும், மகிழ்ச்சியோடுமே காணப் படுவார் ஹோ-சி-மின். அதுமட்டுமல்ல, நடந்து சென்று கொண் டிருக்கும்போதே, உணர்ச்சியோடு, பாடல்கள் பாடுவார்; புதுப் புது கவிதைகள் புனைவார்.

இப்படி இரவுபகலாக நடந்து ஒரு ஜில்லாவின் தலைநகரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே ஜில்லா சிறையில் இரண்டு வாரம் அவர் அடைபட்டுக் கிடந்தார். இந்தச் சிறையில் அவர் பட்டபாடு இருக்கிறதே, அதற்கு எந்த நரகத்தையும் உவமை கூறமுடியாது! உயிரை உடலில் ஒட்டி வைத்துக்கொண்டிருப்பதற்கான ஆகாரம் கூட அந்தச் சிறையில் தரப்படுவதில்லை. அவர் தள்ளப்பட்டிருந்த அறையோ கோழிக் கூடையும் மிஞ்சிவிடும்! எங்கும் ஒரே துர் நாற்றம், அழுக்கு, குப்பைகள்! இதிலே வேறு புளிமூட்டைகளை அடுக்குவதுபோல டஜன் கணக்கான பேர்களை அடைந்திருந்தார் கள். அவர்களிலே பலர் குஷ்டரோகிகள், தொத்துவியாதிக்காரர் கள், பெண் சிக்குக்காரர்கள், பீப்பாய்க் குடியர்கள்.

இந்தப் பரிவாரம் முழுவதற்கும் சாப்பாட்டு அறை, சயனிக் கும் அறை, கக்கூஸ் எல்லாம் அந்த குகைதான். அதிலும் இந்த அறையைச் சுத்தப்படுத்தும் வேலை ஹோ-சி-மினைச் சேர்ந்தது. ஒரு நாள் காலை அவர் விழித்தெழுந்து பார்க்கையில் தலைமாட்டிலிருந்த மனிதன் செத்துப் பிணமாகக் கிடந்தான். இப்படி ஒரு கைதி செத் துப்போனதைப் பற்றி அங்கு யாரும் கடுகளவும் கவலைப்பட்டதா கத் தெரியவில்லை!

இது தவிர அந்த அறையில் பேன்களும், ஈக்களும், கொசுக் களும், மூட்டைப் பூச்சிகளும் நடத்தும் தர்பார் சொல்ல முடியாது. அங்கே ஈக்கள் கவச மோட்டார்கள்; பேன்கள் டாங்கிகள்; கொசுக்கள் வெடிகுண்டு விமானங்கள். இத்தகைய பயங்கர ஆயு தம் படைத்த இந்த எதிரிகளிடம் சிக்கிக்கொண்டு ஹோ-சி-மின் பட்ட தொல்லைக்கு எல்லை கிடையாது!

பாவம், அவர் இந்த சொல்லொண்ணாத் துன்ப துயரங்களுக் கிடையே சிக்குண்டு, உழன்று உழன்று, துரும்பாக இளைத்துவிட் டார்; அவரது முகமெல்லாம் இரத்தமின்றி வெளுத்துவிட்டது; நரை படர்ந்து மயிர்கள் உதிர்ந்துவிட்டன. இவற்றைப் பற்றி யெல்லாம்கூட அவர் கவலை கொள்ளவில்லை. தனது தொண்டு மக்களுக்கு மிக அவசியமாக தேவைப்படுகிற நேரத்திலே இப்படி உதவாக்கரையாக சிறையிலே செயலற்றுக் கிடக்கிறேனே என் பதுதான் அவருக்கு ஒரே துக்கம்.

பயணம் மீண்டும் துவங்கிற்று. கைகளும் கால்களும் சங்கிலியால் பிணைக்கப்பட்டவாரே அவர் நடந்தார்...நடந்தார்...80 நீண்ட நெடுந் தினங்கள் நடந்தார்! இறுதியாக குவலினையும், அங்கிருந்து லிச்சோவையும் வந்தடைந்தார்.

குவலின் சிறையிலும் பழைய கதைதான். இப்படி 14 மாதங்கள் வெஞ்சிறையில் வாடி, வதங்கிய பிறகு ஹோ-சி-மின் விடுதலை செய்யப்பட்டார். சிறையைவிட்டு வெளியே வந்ததும் தன் கண் பார்வை மங்கியிருப்பதையும், கால்கள் சக்தி இழந்திருப்பதையும் உணர்ந்தார்.

ஆனால் வீர சுதந்திரம் வேண்டி நின்ற அவர் தன்னைப்பற்றி சிறிதும் கவலை கொள்ளவில்லை. நாட்டின் விடுதலையே அவரது நினைவில் மற்றெல்லாவற்றையும்விட மேலோங்கி நின்றது. ஆகவே சீன அதிகாரிகளின் அனுமதி பெற்று, கொஞ்சமும் தாமதியாது, வியட்னுமிற்கு விரைந்தார்!

## 12

இரண்டாண்டுகளுக்குப் பிறகு ஹோ-சி-மின் மீண்டும்வியட்னும் மண்ணில் காலடி எடுத்துவைத்தார். வந்த உடனேயே வியட்னும் சுதந்திர லீகையும், விடுதலைப் படையையும் சீர்திருத்தி பலம் மிக்க ஸ்தாபனங்களாக ஆக்கப் பாடுபட்டார். அவர் தலைமையிலே கொரில்லாப் படைகள் வடவியட்னுமில் திடீர் திடீரென்று ஜப்பானியப் படைகள்மீதும், பிரெஞ்சுப் படைகள்மீதும் தாக்குதல் நடத்தி, ஏராளமான ஆயுதங்களை கைப்பற்றின. இது தவிர நேச நாடுகளிடமிருந்தும் பல நவீன ஆயுதங்கள் கிடைத்தன. இதனுல் வியட்னும் கொரில்லாப்படைகளின் செல்வாக்கும் சக்தியும் நாளுக்கு நாள் அதிகரித்தன. மின்னல்போல் தாக்கி எண்ணற்றோரை பிணமாக்கிவிட்டு மறையும் இந்தப் படைகள் முன் ஜப்பானியர்கள் ரொம்பவும் திணறிவிட்டார்கள். ஆகவே, ஹீ என்னுமிடத்தில் அமைக்கும் தங்கள் 'பொம்மை' சர்க்காரில் சேரும்படி ஹோ-சி-மின்னுக்கு அவர்கள் அழைப்பு விடுத்தார்கள்.

ஆனுல் அவர் இதை நிராகரித்துவிட்டார். அத்துடன் மட்டுமின்றி, ஜப்பானியர்களுக்கெதிராக போரை பன்மடங்கு தீவிரப் படுத்தினுர். வெகு சீக்கிரமே வடக்கு வியட்னுமில் 5 பெரிய மாகாணங்கள் விடுதலைப் படைகளிடம் வந்துவிட்டன. தென் வியட்னுமிலும் ஜப்பானியர்களின் கேந்திரமான போக்குவரத்து சப்ளை பாதைகள் எல்லாம் துண்டிக்கப்பட்டன.

இப்படி விடுதலைப் படைகள் வெற்றிமேல் வெற்றி ஈட்டிக் கொண்டிருந்த தறுவாயில், சுதந்திர வியட்னும் ஸ்தாபனத்தின் விசேஷ மகாநாடு கூடிற்று. இந்த மகாநாட்டில் கலந்துகொள் வதற்காக நாடெங்கிலுமிருந்து பல பிரதிநிதிகள் நாட்கணக்கில் நடந்தே வந்தார்கள்.

மகாநாடு நடந்துகொண்டிருக்கையில் மகிழ்ச்சிக்குரிய செய்தி ஒன்று வந்தது. அதாவது ஜப்பான் நேச நாடுகளிடம் சரண டைந்துவிட்டது என்று தகவல் வந்தது. உடனே ஹோ-சி-மின் இனி ஒரு விநாடிகூட தாமதிக்காது, ஒரு பிரம்மாண்டமான எழுச்சியை நடத்தி தேசமெங்கிலும் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று அறைகூவல் விடுத்தார்.

வியட்னும் மக்களின் ஈடு இணையற்ற தலைவரின் இந்த அறை கூவலை ஏற்று அந்த மகாநாட்டிலேயே ஒரு தற்காலிக சுதந்திர சர்க்கார் அமைக்கப்பட்டது. இந்த சர்க்காரின் தலைவராக ஹோ-சி-மின் மிகுந்த ஆரவாரத்திற்கிடையே, ஏகமனதாகத் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

மகாநாட்டின் முடிவு காட்டுத் தீப்போல எங்கும் பரவிற்று. பெட்ரோல் கிடங்கில் குண்டு விழுந்ததுபோல, மக்களின் நெஞ்சங் களிலே நீண்ட நெடுங்காலமாக, அடங்கி ஒடுங்கிக் கிடந்த ஆக்ரோஷம், ஆத்திரம், கோப தாபமெல்லாம் 'படார், படார்' என்று வெடித்துக் கிளம்பின. ஆயிரக்கணக்கான வாலிபர்களும், விவசாயிகளும், தொழிலாளர்களும் கைக்குக் கிடைத்த ஆயுதங் களை ஏந்தி, கண்ணிமைக்கும் கூற்றுக் கொதிக்கக் கிளம்பினார்கள்; ஜப்பானியப் படைகளை கண்ட கண்ட இடங்களிலெல்லாம் புயலிடி போல மோதி சாடினார்கள்.

எரிமலையென குமுறி எழுந்த இந்தத் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியாமல் ஜப்பானிய சைன்யம், வேரறுந்த மரம்போல அடிசாய்ந்தது. அலங்கார கொலு பொம்மைபோல் வீற்றிருந்த துரோக சர்க்காரின் ஆட்சி பீடமும் ஆட்டங் கண்டது. புரட்சி வடக்கிலிருந்து தெற்குக்கும் பரவியது. எங்கு நோக்கினும் மாளிகைகளிலும், மண் குடிசைகளிலும், அலுவலகங்களிலும், தொழிற்சாலைகளிலும் பொன் நட்சத்திரங்கள் பொறித்த செங் கொடிகள் பல்லாயிரக் கணக்கில் பட்டொளி வீசிப் பறந்தன. இந்தக் கோலாகலத்திற்கிடையே மன்னன் பாவோடாய் முடி துறந்து பிரான்ஸுக்கு ஓடினான். சகல தேசபக்த சக்திகளையும் இணைத்து, இடைக்கால சர்க்காரை தேசத்திற்கு முழு பிரதிநிதித் துவம் வாய்ந்ததாக விரிவுபடுத்தினார்.

இவ்விதம் எல்லாம் ஆயிற்று, இனி அதிகாரப் பூர்வமாக சுதந்திரப் பிரகடனம் செய்யவேண்டியதுதான் பாக்கி. அந்தப் பிரகடனத்தை ஹோ-சி-மினே இதர தம் சகாக்களோடு கலந்து தயாரித்தார்.

1945-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2-ம் தேதி. அன்றுதான் முடியாட்சிக்கு முடிவுகட்டி குடியாட்சிக்கு அடிகோலும் நாள்; வியட்னும் மக்களின் எண்பது ஆண்டு இன்பக் கனவு நிறைவேறும் நாள்; எந்த உன்னத லட்சியத்திற்காக எண்ணற்ற தேசபக்த சுடர்மணிகள் கண்ணீரும், செந்நீரும், அத்துடன் இன்னுயிரும் ஈந்து, தன்னலமற்ற தியாகம் செய்தார்களோ, அந்த அப்பழுக் கற்ற தியாகம் துளிர்த்து, கிளர்ந்து, வளர்ந்து, மகோன்னத மக்கள் குடியரசாக மலரும் நாள்.

அந்தப் புனித தினத்திலே கலந்துகொள்ள பட்டிதொட்டிகள் கிராமங்களிலிருந்தெல்லாம் சாரைசரையாக மக்கள் தலைநகரான ஹனோயை நோக்கி வந்தவண்ண மிருந்தனர். குறிப்பிட்ட காலத்திற்கு பலமணி நேரத்திற்கு முன்னதாகவே பிரம்மாண்ட மான பா டின் சதுக்கம் நிரம்பி வழிந்தது. கரை காணுத சமுத் திரம் போல பத்து லட்சம் மக்கள் குழுமியிருந்த காட்சி வியட்னும் சரித்திரத்திலேயே என்றும் கண்டிராத கண்கொள்ளாக் காட்சி யாகும்.

இந்த ஜனசமுத்திரம் முழுவதும் தன் எண்ணக் கோவிலிலே வண்ணச் சிலையாகத் திகழும் தன் அருமைத் தலைவரை எப்போது காண்போம்என்று மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஹோ-சி-மினை இதுவரை நேரில் பார்க்காத லட்சக் கணக்கான மக்கள் அவர் எப்படி யிருப்பார் என்பதைப் பற்றி ஒருவகையான கற்பனை செய்து வைத்திருந்தனர். அதாவது அவர் கம்பீரமாக ஆஜானுபாகுவாக இருப்பார்; கண்ணை மின் வெட்டும் மிக உயர்ந்த உடைகள் உடுத்தி டாம்பீகமாக இருப்பார்; வண்ண ஜாலங்கள் மிளிரும், பல்லாயிரக் கணக்கான பிராங்குகள் பெறும் நவநாகரீக பிரெஞ்சுக்காரிலே அன்னம்போல மிதந்து வந்து, ஆடாது அலுங் காது குலுங்காது வந்து இறங்குவார் என்றெல்லாம் அவரைப்பற்றி ஒரு உருவகம் செய்து வைத்திருந்தார்கள். ஏனென்றால் இதுவரை அவர்கள் பார்த்த வியட்னும் தலைவர்களெல்லாம் அப்படித்தா னிருந்தார்கள்.

ஆனால் தலைவர் வரவேண்டிய நேரம் வந்ததும் சேறும் புழுதி யும் படிந்த ஒரு ஜீப்காரில், வயலில் அப்போதுதான் இறங்கி வேலை செய்துவிட்டு வந்த ஒரு ஏழை விவசாயிபோல மிக சாதாரணமாக மேடையில் வந்து நின்ற ஒரு நோஞ்சானன மனிதரை இவர்தான்

'நம் தலைவர் 'ஹோ-சி-மின்' என்று அறிமுகம் செய்துவைக்கப் பட்டதும் குழுமியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களும் அப்படியே ஆச்சரியத்தில் மூழ்கிவிட்டார்கள். பரம ஏழையையும் விட எளிமையாக, சாயம்போன ஒரு பழைய காக்கிச் சட்டையும், நிஜாரும் அணிந்து, தங்கள் முன் சாந்தமே உருவாக நிற்கும் ஹோ-சி-மினைக் கண்டதும் ஆண் பெண் அனைவருடைய கண்களிலும் கண்ணீர் துளிர்த்துவிட்டது!

பின்னர் காது செவிடுபடும் கரகோஷத்துக்கிடையே சுதந்திரப் பிரகடனத்தை ஹோ-சி-மின் ஆழ்ந்த, உறுதியான, நிதானமான குரலில் வாசித்தார். பிரகடனத்தின் ஒரு பகுதியை வாசித்ததும், 'என் அன்புக் குழந்தைகளே, நான் வாசிப்பது உங்களுக்குத் தெளிவாகக் கேட்கிறதா?' என்று வெள்ளை உள்ளத்தோடு கேட்டார் ஹோ-சி-மின்.

இந்த ஒரு வார்த்தை அங்குக் கூடியிருந்த லட்சக் கணக்கான மக்களின் இதய ஆழத்தைத் தொட்டு அவர்களை மெய்ச் சிலிர்க்க வைத்துவிட்டது. இதுவரை எந்தத் தலைவனும் இவ்வளவு அன்போடும், அந்நியோன்னியமாகவும் தங்களிடம் பேசியதில்லை. ஆகவே, உள்ளமெல்லாம் சிலிர்த்து உணர்ச்சி மேலிட, 10 லட்சம் குரல்கள் "எங்கள் தந்தை ஹோ-சி-மின் வாழ்க" என்று அண்டமெல்லாம் அதிர வாழ்த்தொலிகள் எழுப்பின. இந்தக் காட்சி கல் மனத்தையும் உருகச் செய்வதாக இருந்தது!

## 13

மக்களுக்காக, மக்களால், மக்களைக்கொண்டு நடைபெற்ற வியட்னும் குடியரசு, அரும்பெரும் தலைவர் ஹோ-சி-மின் தலைமையில், மிகக் குறுகிய காலத்தில், ஏறுநடை போட்டு முன்னேற ஆரம்பித்தது. பிரெஞ்சு, ஜப்பானிய வெறியர்களின் நாசவேலைக்காளாகி, பாலைவனமாகக் காட்சியளித்த நாட்டை சோலை வனமாக ஆக்க பிரம்மாண்டமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந்நிய சுரண்டலையும் உள்நாட்டுச் சுரண்டலையும் ஒழித்துக் கட்டி, உழைப் போர்க்கே அதிகாரம் என்னும் உன்னதக் கொள்கை பிரகடனப் படுத்தப்பட்டது.

இவையெல்லாம் பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்திய வாதிகளின் உருட்டுக் கண்களை உறுத்தின. ஆண்டாண்டு தோறும் தாங்கள் அடித்துவந்த கொள்ளைக்கு ஆபத்து வந்துவிட்டதே என்று

அவர்களுக்கு ஆத்திரம். இந்த அங்கலாய்ப்பில் வியட்னும் குடியரசுக்கெதிராக பல்லை நெறிக்க ஆரம்பித்தார்கள்.

ஆனல் ஹோ-சி-மின் இவற்றைக் கண்டு பொறுமை இழந்துவிடவில்லை. வியட்னும்மீது இன்னொரு மிகக் கொடிய யுத்தம் கட்டவிழ்த்து விடப்படுவதை அவர் வெறுத்தார். சுதந்திரப் போராட்டத்தில் ஏற்கனவே ஆயிரக் கணக்கான உயிர்கள் தியாகம் செய்யப்பட்டு விட்டன. இதற்கு மேலும் மக்களின் இரத்தம் சிந்தப்படுவதை அவர் விரும்பவில்லை. அவர் விரும்பியதெல்லாம் நாட்டுக்கு சுதந்திரம், ஒற்றுமை, சமாதானம். இதற்காக 1946-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் தேதி பிரெஞ்சு சர்க்காருடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்.

இதன்படி வியட்னும் குடியரசை பிரான்ஸ் அங்கீகரித்தது. இதற்குப் பதிலாக சிறிதுகாலம் பிரெஞ்சு யூனியனில் வியட்னும் இருக்கவும், ஜப்பானியர்களை நிராயுதபாணிகளாக்குவதற்காக 15 ஆயிரம் பிரெஞ்சு துருப்புக்களை வியட்னும் மண்ணில் இறக்குவதற்கும் ஹோ-சி.மின் சம்மதித்தார்.

ஆனல் அந்தரங்க சுத்தியாக அவர் நீட்டிய நேசக் கரத்தை பிரெஞ்சு காலனி வெறியர்கள் வெகு சீக்கிரமே உதறிவிட்டார்கள். மார்ச் ஒப்பந்தம் கையெழுத்தாகி, அதன் மைகூட உலர்வதற்குள்ளாகவே, அவர்கள் தங்கள் விசுவரூபத்தைக் காட்டிவிட்டார்கள். இந்த மார்ச் ஒப்பந்தம் தங்கள் சதித் திட்டத்தை மூடி மறைக்கச் செய்க ஒரு நயவஞ்சக ஏற்பாடு என்பதை நிரூபித்துவிட்டார்கள். கொஞ்சமும் நீதி நேர்மையற்ற முறையில் 1946 செப்டம்பரில் வியட்னும் மீது யுத்தம் தொடுத்தார்கள். ஜப்பானியர்களை நிராயுதபாணிகளாக்க இறக்கப்பட்ட பிரெஞ்சுப் படைகள் ஜப்பானியர்களையும் சேர்த்துக் கொண்டு பச்சைத் துரோகத்தனத்தோடு வியட்னும் தலைநகரையும், இதர கேந்திர நகரங்களையும் தாக்க ஆரம்பித்தார்கள். இரண்டாவது மகா யுத்த காலத்திலே ஜப்பானியப் படையெடுப்பை முறியடிக்கத் திராணியற்று ஓடிப் போனவர்கள் இப்போது வெட்கமின்றி உரிமை கொண்டாட வந்துவிட்டார்கள்.

இந்த அக்கிரமக்காரர்களுக்கு பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் பக்கபலம் வேறு. இனம் இனத்தோடே வெள்ளாடும் தன்னேடே என்பதுபோல இவர்கள் பிரெஞ்சுக்காரர்களுக்கு ஏராளமான பணமும், ஆயுதங்களும், விமானங்களும், டாங்கிகளும், வெடிகுண்டுகளும் கொடுத்து, இந்தோ சீன மக்களை கொன்று குவித்து, கொலைவெறி நடத்த உடந்தையாக இருந்தார்கள்.

இதுமட்டுமின்றி, ஜப்பானின் 'குவிஸ்லிங்காக' 'ஏஜண்டாக' இருந்த மன்னன் பாவோடாயை பிரெஞ்சுக்காரர்கள் மீண்டும் குளிப்பாட்டி, சுத்தப்படுத்தி இந்தோ சீனுவின் அரசனுக பெயருக்கு முடிசூட்டி வைத்தார்கள். அமெரிக்கர்களோ வியட்னுமில் தங்கள் ஆதிக்கத்தை வேரூன்றச் செய்யவேண்டும் என்பதற்காக தங்கள் எடுபிடியான டின் டிமை அந்த நாட்டில் கொண்டுபோய் இறக்குமதி செய்தார்கள்.

ஆனுல் என்ன நேரிடினும் வீரர் ஹோ-சி-மினும் திரம் மிகுந்த வியட்னும் மக்களும் அணுவும் அதைரியமடையவில்லை. இன்னும் கருக்கு மீசைகூட விடாத இளைஞர்கள், குடு குடு கிழவர்கள், தளிர்மேனி பெண்கள், கீரைத் தண்டுப் பருவத்திலுள்ள சின்னஞ் சிறுர்கள் ஆகிய அனைவருமே ஒரு மனிதன்போல கட்டுக்கோப்பாக ஒன்று திரண்டு, தங்கள் உயிர் போன்ற சுதந்திரத்திற்கு உலை வைக்க வரும் வைரிகளை எதிர்த்து வைரம் பாய்ந்த நெஞ்சோடு போராடினுர்கள்.

உள்ளத்திலே உன்னத உயரிய கொள்கை ஒளிர்விட, நெஞ்சிலே நீதியையும் தோளிலே துப்பாக்கியையும் ஏந்திப் போரிட்ட இந்த வீர பரம்பரையினர் முன்பு சோற்றுப் பட்டாளங்கள் வெற்றிபெற முடியவில்லை; பிரிட்டனும், அமெரிக்காவும் பின்னிருந்து ஊக்கியும்கூட, பிரெஞ்சுத் துருப்புகள் படுதோல்வியே கண்டது.

அதிலும் டின் பின் பியூவில் பிரெஞ்சு ராணுவம் சரித்திரம் கண்டிராத ஒரு பெரும் அபஜயமடைந்தது. பிரிட்டிஷ், பிரெஞ்சு, அமெரிக்க ராணுவ பலம்பற்றியும் ராணுவ தந்திரம்பற்றியும் இதுவரை இருந்து வந்த மாயை சுக்கு நூருபிற்று. ஆயிரக்கணக்கான பிரெஞ்சு போர்வீரர்களும் பல பத்து தளபதிகளும் சரணடைந்தனர்.

இந்தச் சமயம் இந்தோ சீனுவில் போர் நிற்கவேண்டுமென்று உலக மெங்கிலும் சமாதானக் குரல் எழுந்தது. இந்தியா, சீனு, சோவியத் யூனியன் போன்ற நாடுகள் வியட்னுமில் சண்டை நிற்க பெரும் முயற்சி எடுத்துக்கொண்டன. உலகப் பொதுஜன அபிப்பிராயத்திற்கு எதிராகச் செல்ல முடியாமல் ஆக்ரமிப்பாளர்களும் உச்சாணிக் கிளையிலிருந்து இறங்கி வந்தார்கள். ஜெனீவாவில் ஒரு மகாநாடு நடைபெற்றது. இந்த மகாநாட்டில் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. பாரபட்சமற்ற தேர்தல் நடத்தி வட வியட்னுமையும் தென் வியட்னுமையும் இணைக்கவேண்டும் என்றும் தீர்மானமாயிற்று.

இந்த மகாநாட்டின் முடிவின்படி வட வியட்னுமில் ஹனேயை தலைநகராகக்கொண்டு ஜனநாயகக் குடியரசு மலர்ந்தது. இந்தக் குடியரசின் தலைவராக ஹோ-சி-மின் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்,

# 14

புதிய குடியரசின் தலைவரான ஹோ-சி-மின் தம் சக தோழர் களின் ஒத்துழைப்போடும், மக்களின் பேராதரவோடும் கடந்த சில ஆண்டுகளிலே பற்பல அரிய சாதனைகள் செய்துள்ளார்; யுத்த இடிபாடுகளிடையே நாசமடைந்து கிடந்த வியட்னுமை புதிதாக நிர்மாணித்து. புது வாழ்வு கொடுத்துள்ளார்; எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் எவருமே இந்த நாட்டில் இருக்கக்கூடாது என்று ஒரு கோஷம் எழுப்பினர்; அதன்படி இன்று கல்லாமை வெகு வாகக் குறைந்துவருகிறது. 85 சதவிகிதத்திற்கு மேலிருந்த படிப் பின்மை இப்போது 30 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது.

'ஒரு அங்குல நிலம்கூட' தரிசு கிடக்கக்கூடாது என்பது அவர் எழுப்பிய இன்னொரு முக்கிய கோஷம். இதன்படி நாட்டி லுள்ள அத்தனை நிலங்களுமே இன்று சாகுபடிக்குக் கொண்டு வரப் பட்டுள்ளன. அதோடு நெஞ்சீரமற்ற நிலப் பிரபுத்வம் ஒழிக்கப் பட்டு, உழுபவனுக்கே நிலம் என்ற அடிப்படையில், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப் பட்டிருக்கிறது.

இந்தப் புரட்சிகரமான கொள்கையால் உணவு உற்பத்தி அமோகமாகப் பெருகியிருக்கிறது. முன்பு மக்கள் உண்ண உண வின்றி, பஞ்சத்தாலும் பசியாலும் கொத்துக் கொத்தாகச் செத்து மடிவார்கள். 1944-45ம் ஆண்டுகளில் பிரெஞ்சு ஆட்சியில்கூட 20 லட்சம் மக்கள் பட்டினியால் அணுஅணுவாக மாய்ந்து மடிந் தார்கள். ஆனல் இன்று இந்த நிலை அடியோடு மாறிவிட்டது. பூத்து மலர்ந்த புது ஆட்சியிலே வியட்னும் தனது தேவையைப் பூர்த்தி செய்துகொண்டதோடு வெளிநாடுகளுக்கும் உணவு ஏற்று மதி செய்யும் உன்னத நிலையில் இருக்கிறது.

இதுமட்டுமல்ல, ஹோ-சி-மின்னின் நல்லரசில் வேலையில் லாத் திண்டாட்டம் அறவே ஒழித்துக் கட்டப்பட்டு விட்டது; ஏழ் மையும், வறுமையும் பழங்கதையாகிவிட்டன; வயிற்றுப் பிழைப் புக்கு விபச்சாரம் செய்யும் இழிநிலைக்கு முழுக்கமுழுக்க முற்றுப் புள்ளி வைத்தாகிவிட்டது; குடியும், அபினியும் தடைப்படுத்தப் பட்டுவிட்டன.

இன்னும், கேவலம் ஒரு குண்டூசிக்குக்கூட அந்நிய நாட்டை எதிர்பார்த்து அண்ணாந்து தொண்ணுந்து நின்ற ஒரு நாட்டிலே இன்று ஒன்றன்பின் ஒன்ருக பல பிரம்மாண்டமான கன யந்திரத் தொழிற்சாலைகள் எழுந்தவண்ண மிருக்கின்றன. மக்களது கலாச்சார வாழ்விலும் ஒரு புதிய மறுமலர்ச்சி தோன்றியுள்ளது. அதோடு எல்லாமிருக்கும் அத்திருநாட்டிலே, இல்லாமை ஒழிக்கப்பட்டு, வரண்டு கிடந்த சாமான்ய மக்களின் வாழ்வில் இன்று வசந்தம் ஏற்பட்டுள்ளது. இவ்விதம் ஹோ-சி-மின், மகோன்னத மார்க்ஸிய ஒளியிலே, சோஷலிஸ சித்தாந்த வழியிலே இன்று வியட்ஞமை சுதந்திரம், சுபீட்சம், சமாதானம், ஜனநாயகம் நோக்கி தலைமைதாங்கி நடத்திச் சென்றுகொண்டிருக்கிருர்!

# 15

ஆசியாவின் தலைசிறந்த புரட்சித் தலைவர்கள் வெகு சிலரிலே டாக்டர் ஹோ-சி-மின் ஒருவர். அவரது வாழ்க்கை, நாட்டுப் பற்றுக்கொண்டோர் எப்படி இருக்கவேண்டும், நாடாளும் வாய்ப்புக் கிடைத்தபின் அவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு வழிகாட்டும் ஒரு இலக்கணம்; சில பல ஏட்டு இலக்கியங்களைவிடச் சிறந்த இலக்கியம்!

நித்தியம் தரித்திரம் தாண்டவமாடும் ஒரு குடும்பத்திலே பிறந்தார்; தாய்நாட்டின் விடுதலைக்காக தாங்கொண்ணு கஷ்ட நஷ்டங்களை, துன்ப துயரங்களை யெல்லாம் மனமகிழ்வோடு ஏற்ருர்; இன்று 2 கோடி வியட்னும் மக்களின் ஈடு இணையற்றத் தலைவராக ஏன் உலகம் முழுவதுமே புகழும் ஒப்பற்ற மேதையாகத் திகழ்கிருர்.

இத்தனை உயர்நிலையிருந்தும் அவர் கனவிலும் கர்வம் கொண்டதில்லை; மறந்தும் ஆர்ப்பாட்ட ஆடம்பரங்களிலே மனம் செலுத்தியதில்லை; எளிமைக்கென்று ஒரு உருவம் கொடுத்தால், அந்த உருவம் ஹோ-சி-மின்னுகத்தான் இருக்கும் என்று சொல்கிற அளவுக்கு அவரது வாழ்க்கை மிக மிகச் சாதாரணமானது!

நம் நாட்டிலும்தான் எளிமை வாழ்வு வாழ்ந்து காட்டிய அண்ணல் காந்தியடிகளின் அடியார்கள் ஆட்சி பீடத்திலே இருக்கிருர்கள். ஒரு இந்திய மகனுக்கு சராசரி வருடம் 200 ரூபாய் கூட வருமானம் கிடைக்காத இந்தத் தரித்திர நாட்டிலே காருண்ய காங்கிரஸ் ஆளவந்தார்களின் 'தர்பார்' என்ன தெரியுமா? ராஷ்ட்ரபதிக்கு வருடம் 20 லட்ச ரூபாய் செலவு; கவர்னருக்கு 10 லட்ச

ரூபாய் செலவு; அமைச்சருக்கு 5 ஆயிரம் 10 ஆயிரம் என்று சம்பளம்!

இதோடு அரண்மனைவாசம், ஆள் அம்புகள், குளிர்பதன தனி ரெயிலிலே மேனி குலையாது பயணம்; ஹோட்டலில் தினம் 100 ரூபாய் வாடகை அறையில், வேளைக்கு 75 ரூபாய் செலவில் ஈளபோக விருந்து! இது நம் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களின் 'எளிமை'.

ஆனல் ஹோ-சி-மின் வாழ்க்கை இப்படிப்பட்ட ராஜ போகத்தைச் சேர்ந்ததல்ல. ஒரு நாட்டின் ஒப்பற்றத் தலைவராக விளங்கும் அவருக்கு எத்தனை உடுப்புகள் இருக்கின்றன தெரியுமா? இரண்டே ஜதை உடுப்புகள்; அதாவது இரண்டு மேல்சட்டைகள்; இரண்டு கால்சட்டைகள்! அதுவும் அசல் மோட்டா காக்கியில்! இதைச் சொன்னல் நம்பமாட்டீர்கள், ஆனல் உண்மை.

இங்கே உள்ளம் உருக்கும் ஒரு சம்பவத்தைக் கூறுகிறோம் கேளுங்கள். 1945 செப்டெம்பர் மாதம் 2-ம் தேதி அன்று வியட்னும் சுதந்திரமடையப் போகிறது. இந்த விடுதலை தினத்தில் கலந்துகொண்டு சுதந்திரப் பிரகடனம் செய்வதற்காக, தற்காலிக சர்க்காரின் தலைவர் ஹோ-சி-மின் ஹனேய்க்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தார். வியட்னும் மக்களின் 80 வருட கனவு நிறைவேறப்போகும் அந்தப் புனித நாளில் கலந்து கொள்ளப் போகும்போதுகூட அவர் விசேஷ உடை எதுவும் உடுத்தவில்லை. தமது பழைய காக்கி உடுப்புகளையே அணிந்து கொண்டு புறப்படத் தயாரானர்.

அப்போது போர் முனையிலிருந்து ஒரு அயல் நாட்டு ராணுவ அதிகாரி 'பாரசூட்' துணியில் தைத்த உடைகளை அணிந்து கொண்டு அங்கு வந்திருந்தார். ஆடையில்லாததாலேயே இப்படி 'பாரசூட்' துணியில் உடை தைத்துக்கொண்டதாக அவர் கூறினர். உடனே ஹோ-சி-மின் தன்னிடமிருந்த 'கோட்டை' அவருக்குக் கொடுத்தார். இதைக் கண்டதும் அந்த அதிகாரி கண்களில் நீர் ததும்ப, அதனை வாங்குதற்குத் தயங்கினர், "பரவாயில்லை வாங்கிக் கொள்ளுங்கள். என்னிடம் இன்னெரு கோட் இருக்கிறது. அது போதும் எனக்கு" என்ருர் ஹோ-சி-மின்.

இது இப்படியென்ருல் இரண்டாவது மகாயுத்தம் ஆரம்பமாவதற்கு சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவில் நடந்த ஒரு சம்பவத்தைக் கேளுங்கள். ஒரு அமெரிக்கத் துறைமுகத்தில் அந்நிய கப்பல் ஒன்று வந்து நின்றது. அந்தக் கப்பலின் கேப்டன் அந்த அமெரிக்க பட்டணத்தின் மேயரைக் கண்டு பேசச் சென்ருர்.

அப்போது அந்த மேயர் 'பைஜாமா' போட்டுக்கொண்டு வந்து கேப்டனை வரவேற்று விட்டாராம். இது தம்மை ரொம்பவும் அவமானப்படுத்திய தாகும் என்று கோபித்துக்கொண்டு அந்தக் கேப்டன் போய்விட்டாராம். இந்தச் சம்பவம் அந்த இரு நாடுகளின் ராஜதந்திர உறவுகளை பாதிக்கும் அளவுக்குக்கூடப் போய்விட்டது என்று கூறப்பட்டது! வியட்னுமில் நடந்ததும், அமெரிக்காவில் நடந்ததும் உடை விஷயங்கள்தான். ஆனால் இந்த இரண்டு சம்பவங்களுக்கு மிடையே எவ்வளவு மலைக்குப் மடுவுக்குமுள்ள வித்தியாசம் பாருங்கள்! இதுதான் நற்பண்பு உள்ள நல்ல ஆட்சியாளருக்கும் வெறும் வரட்டு கௌரவம் படைத்த ஆட்சியாளர்களுக்குமுள்ள வித்தியாசம்!

இது ஒருபுறமிருக்க ஹோ-சி-மினுக்கு விலைஉயர்ந்த உடைகள் தைத்துக்கொடுக்க எத்தனையோபேர் முன்வந்தார்கள். ஆனால் இவற்றை எல்லாம் அவர் ஏற்கவே இல்லை. "இந்த இரண்டு உடுப்புகள்கூட இல்லாத என் நாட்டு மக்கள் பலர் இருக்கும்போது எனக்கு இவைகளே போதும்" என்று கூறிவிட்டார்.

உடை மட்டுமல்ல, அவரது சாப்பாடும் மிக எளிமையானது. கொஞ்சம் சாதம், ஒன்றிரண்டு காய் கறிகள், சிறிது சூப் இவை தான் அவரது ஆகாரம். இதையும் அவர் சாப்பிடும் விதமே அலாதி. நம் நாட்டிலே ஆட்சி பீடத்தில் இருக்கும் அமைச்சர் பெருமான்களும், கவர்னர் பெருமான்களும் விசேஷ தனி இடத்திலே தலைவாழை இலைபோட்டு, இருபத்து எட்டு காய்கறிகள் வைத்து, அதற்குமேல் ஏழெட்டு இனிப்புகளும், அறுசுவை கனிகளும் வைத்து, ஐந்து பேர் பரிமாற, நான்கு பேர் விசிறி வீசி உபசரிக்க, ராஜ விருந்து உண்கிறார்களே அப்படி அல்ல அவர் சாப்பிடுவது. அதற்குப் பதிலாக தம்மிடம் வேலை செய்யும் ஊழியர்கள், சேவகர்களோடு ஒன்றாகக் கலந்து, அவர்களோடு சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுவார். இந்தக் காட்சியைப் பார்க்கும் எவருக்கும் ஒரு கலகலப்பான குடும்பமும், அந்தக் குடும்பத்தின் அன்பு மிகுந்த தந்தையும், மரியாதை மிக்கக் குழந்தைகளின் ஞாபகம்தான் வரும்!

உடை, ஆகாரம் மட்டுமா? அவரது பேச்சும், எழுத்துங்கூட மிகமிக எளிமையானவை; இனிமையானவை; சரளமானவை. இத்தனைக்கும் அவர் நிரம்பப் படித்தவர்; பெரிய அறிஞர்; நாவலாசிரியர்; கவிஞர்; ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன், ஜப்பான், சீனம், போர்ச்சுகீஸ் முதலிய 7 உலகப் பாஷைகளிலே பாண்டித்யம் மிக்கவர். அப்படியிருந்தும் அவர் தமது மேதா விலாசத்தைக் காட்டி எவரையும் பயமுறுத்துவதில்லை; ஆர்ப்

பாட்டம் செய்வதில்லை. அவர் நிறைகுடம் அல்லவா? குறை குடம் அல்லவே.

ஆகவே மக்களிடையே மிக அடக்கமாகப் பேசுவார். இந்த நாட்டிலே அர்த்தமற்ற அடுக்குச் சொற்களை மூலதனமாக வைத்து ஒரு கட்சியே இருக்கிறதல்லவா! அந்த மாதிரி அவர் தான் ரொம்பவும் படித்தவன் என்ற அகந்தையோடு, வீண் அலங்காரச் சொற்களைப் போட்டு விஷயத்தை குழப்பமாட்டார். அதற்குப் பதிலாக சமுதாயத்தின் அடித்தட்டிலே மிக மிகக் கீழே உள்ள ஒரு சர்வ சாதாரண மனிதனும் புரிந்துகொள்ளும் விதத்தில் எளிதாகப் பேசுவார்.

சில சமயங்களில் 'குருவக்' என்னும் பத்திரிகைக்கு அவர் தலையங்கங்கள் எழுதுவதுண்டு. இப்படி எழுதிய தலையங்கங்களை படிப்பறிவில்லாத வயோதிகர்கள் அடங்கிய கூட்டத்திலே படித்துக் காட்டுவார். தனது கருத்துக்களை அவர்கள் பூரணமாக புரிந்துகொள்ள முடியவில்லை என்று தெரிந்தால் உடனே அந்தத் தலையங்கங்களை கிழித்தெறிந்துவிட்டு, வேறு புதிதாக எழுதுவார்.

அவரது தினசரி அலுவல்கள் விநாடிக்கு விநாடி திட்டமிடப் பட்டே நடக்கும். பனியோ, மழையோ, புழுக்கமோ என்ன கால நிலையாக இருந்தாலும்சரி, அதிகாலையில் 5 மணிக்கு முன்பே எழுந்து விடுவார். அரை மணி நேரம் தேகப் பயிற்சி செய்வார். இதனை ஒருபோதும் மறப்பதில்லை. இப்படி ஒழுங்காக தேகப் பயிற்சி செய்ததால்தான் தன்னைப் பீடித்திருந்த பயங்கர க்ஷயரோகம் தன்னை விட்டு வைத்தது என்று அவர் கூறுவதுண்டு.

இதன் பின்னர் காலை 7 மணிக்கு ஏதாவது ஒரு பள்ளிக்கூடம், கலாசாலை, ஆஸ்பத்திரி, சர்க்கார் அலுவலகம், போலீஸ் நிலையம், ராணுவ முகாம் இப்படி எங்கேயாவது ஒரு இடத்திற்கு திடீர் என்று விஜயம் செய்வார். அவர் வருகையை முன்கூட்டியே அறிவிக்கமாட்டார். ஏனென்றால் இந்த இடங்களிலெல்லாம் உண்மையில் என்ன நடக்கிறது என்பதை நேருக்கு நேர் தெரிந்து கொள்ள அவர் விரும்பினார்.

இது முடிந்ததும் சரியாக 7–30 மணிக்கு தமது அலுவலகத் திற்குச் செல்வார். அங்கு குறிப்பிட்ட நேரத்தில் வருவதிலே அவர்தான் முதல் ஆளாக இருந்து பிறருக்கு வழி காட்டுவார். மத்தியானம் ஆனதும் சாப்பாடு விடுதிக்குச் சென்று, மந்திரிகள், கிளார்க்குகள், டிரைவர்கள், போலீஸ்காரர்கள், தொழிலாளர்கள் முதலியோர்களோடு உட்கார்ந்து, பேசி மகிழ்ந்து உணவு அருந்துவார்.

மாலை ஆனதும் வெளிநாட்டிலிருந்து வந்துள்ளவர்கள், பொதுஜன ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், தம்மை பார்ப்பதற்காகவே பல மைல்கள் நடந்து வந்துள்ளவர்கள் ஆகிய அனைவர்களுக்கும் தவருது பேட்டி அளித்து, இன்முகத்துடன் அவர்களுடன் பேசி அளவளாவுவார்.

பின்னர் இரவு 7 மணியிலிருந்து நடுநிசிவரை புத்தகங்கள், பத்திரிகைகள் படிப்பது, மந்திரிகள், அதிகாரிகளோடு பல்வேறு பிரச்னைகளைப்பற்றி விவாதிப்பது முதலியனவெல்லாம் நடைபெறும். அப்புறம் இரவு 1 மணிக்குத்தான் படுக்கைக்குச் செல்வார்.

நேரம் பொன்னைவிட மேலானது என்று ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டல்லவா? இதை அட்சரம் பிசகாது கண்டிப்பாக கடைப் பிடிப்பவர் ஹோ-சி-மின். என்ன தலைபோகிற அவசரமானுலும் சரி, காரியமானுலும் சரி, குறித்த காலத்தில் குறிப்பிட்ட காரியத்தை முடித்தே திருவார். நம் நாட்டிலே தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சிலர் கூட்டங்களுக்கு நேரம் கழித்து வருவதையே ஒரு கலையாகவும், கட்சியின் செல்வாக்கைப் பெருக்கும் ஒரு வழியாகவும் அனுஷ்டித்து வருகிருர்களல்லவா அம்மாதிரி செய்பவரல்ல ஹோ-சி-மின்.

ஒரு சமயம் அவரது சகோதரி நீண்ட நாட்களுக்குப் பிறகு அவரோடு சற்று அதிக நேரம் தங்கியிருந்து, க்ஷேம நலன்களை விசாரித்துவிட்டுச் செல்லலாம் என்று ஊரிலிருந்து வந்திருந்தார். ஆனுல் அவர் ஒரு தவறு செய்துவிட்டார். அதாவது தனது சொந்தத் தம்பிதானே என்று நினைத்து, தான் இன்னநாளில் இந்த நேரத்தில் வருகிறேன் என்பதை முன்கூட்டியே அவருக்குத் தெரிவிக்கத் தவறிவிட்டார். இந்தத் தவறின் காரணமாக அன்று அவர் தனது சகோதரனிடம் ஒருசில நிமிடங்கள்தான் தங்கி இருக்க முடிந்தது! காலத்தைக் காப்பாற்றுவதில் அவ்வளவு கண்டிப்பானவர் அவர். அதனுல்தான் 'ஹோ-சி-மின் நேரம்' என்று ஒரு புதிய நேரத்தையே இந்தோ சீனுவில் வேடிக்கையாகக் குறிப்பிடுவது உண்டு'.

நம் நாட்டில் ஒரு சின்னஞ் சிறு பெட்டியை கையில் தூக்கி வருவதுகூட அகௌரவம் என்று நினைத்து, கூலியைத் தேடும் எத்தனையோ இளைஞர்களை தினமும் ரயில்வே நிலையங்களில் பார்க்கிருேமல்லவா! இத்தகைய இனத்தைச் சேர்ந்தவரல்ல ஹோ-சி-மின். அவர் மிகப் பெரிய பதவியில் இருந்தபோதிலும் தமது வேலைகளை தாமே செய்துகொள்வார்; எதற்கெடுத்தாலும் வேலைக்காரர்களது உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்;

தமது பொருள்களை தாமே ஒழுங்குப்படுத்தி வைத்துக்கொள்வார். அவரது சின்னஞ் சிறிய அறையைப் பார்த்தால் மிகவும் சுத்தமாகவும், ஆடம்பரமின்றியும், அந்தந்தப் பொருள்கள் ஆங்காங்கே கச்சிதமாக முறைப்படுத்தி வைக்கப்பட்டுமிருக்கும்!

# 16

ஹோ-சி-மின் பிரம்மச்சாரி. எனினும் அவருக்குக் குழந்தைகள் என்றால் உயிர். எந்த ஊருக்குச் சென்றாலும் குழந்தைகளைத்தான் முதலில் பார்ப்பார். அவர்கள் நடத்தும் வைபவங்களிலெல்லாம் சந்தோஷத்தோடு கலந்துகொள்வார். அடிக்கடி குழந்தைகள் தாது கோஷ்டிகளை வரவழைத்து, அவர்களோடு தாமும் ஒரு குழந்தையாக ஆடிப்பாடி, மகிழ்வார்; குழந்தைகளை தமது முதுகில் தூக்கி வைத்துக்கொண்டு தரையிலே தவழ்ந்து குதிரை விளையாட்டு விளையாடுவார்!

குழந்தைகளுக்கும் ஹோ-சி-மின் என்றால் ஒரே அன்பும் ஆர்வமும்! அவரது பெயர் அவர்களுக்குத் தேன்! வியட்நாமிலுள்ள 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளெல்லாம் அவரை "ஹோ-சி-மின் மாமா" என்றே உரிமையோடு அழைக்கும். பல குழந்தைகள் அவருக்குத் தங்கள் பிஞ்சுக் கரங்களாலேயே மழலை மொழியில் கடிதங்கள் எழுதும்; இன்னும் சில குழந்தைகள் விதம்விதமான பரிசுகள் அனுப்பும்.

ஹோ-சி-மினும் தமது பல்வேறு அலுவல்களுக் கிடையேயும் குழந்தைகளின் கடிதங்களுக்கெல்லாம் தம் கைப்படவே பதில்கள் எழுதுவார். பரிசுகள் அனுப்பிய குழந்தைகளுக்கு நன்றி தெரிவித்து பதில் பரிசுகள் அனுப்புவார்.

பல சந்தர்ப்பங்களில் குழந்தைகளுக்கிடையே ஹோ-சி-மினின் பெயர் அநேக அற்புதங்களை சாதித்துவிடும். உதாரணமாக நீம் என்னும் நான்கு வயது குழந்தை ஒரு சமயம் உடல் நலனற்று இருந்தது. பெற்றோர்கள் எவ்வளவு நயந்தும் பயமுறுத்தியும் அது பிடிவாதமாக மருந்து சாப்பிட மறுத்துவிட்டது. என்ன செய்வதென்று அவர்கள் திகைத்துக் கொண்டிருந்த வேளையில், தாய்க்கு சட்டென்று ஒரு யோசனை உதித்தது.

உடனே, "கண்ணே நீம், நீ மருந்து சாப்பிடவில்லை யென்றால், உன்னை ஹோ-சி-மின் மாமா நேசிக்கமாட்டார்" என்று தாய் ஒரு போடுபோட்டாள்.

அவ்வளவுதான் இந்த வார்த்தையைக் கேட்டதும் படுத்துக் கொண்டிருந்த குழந்தை சுருட்டி வாரி எழுந்து, தாயின் கையி லிருந்த மருந்தை வெடுக்கென்று பிடுங்கி, கண்ணை மூடிக்கொண்டு மடமடவென்று குடித்துவிட்டாள்.

"அம்மா, நான் ஒழுங்காக நடந்துகொண்டேனென்று ஹோ மாமாவிடம் சொல்லம்மா" என்று அழாக் குறையாகக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டது அந்தக் குழந்தை!

குழந்தைகளைப் போலவே வியட்னுமிலுள்ள லட்சோப லட்ச மக்களும் தங்கள் ஆருயிர்த் தலைவரை கண்ணிலே வைத்து இமை யிலே காத்து நேசிக்கிறார்கள். ஒரு தந்தையிடம் குமாரர்கள் வைத் துள்ள அன்பும் பாசமும் அவரிடம் கொண்டுள்ளார்கள். இந்த மாசற்ற அன்பை வெளிப்படுத்தும் பல சம்பவங்களை நாம் அடுக்கிக் கொண்டே போக முடியும். ஆனால் விரிவுக்கு அஞ்சி ஒன்றிரண்டை மட்டும் கீழே கொடுக்கிறோம்.

ஒரு சமயம் ஹனோயில் ஒரு பிரம்மாண்டமானப் பொதுக் கூட் டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே ஹோ-சி-மினின் சிறிய புகைப்படமொன்று ஏலத்திற்கு விடப்பட்டது. இதனை ஒரு நபர் 1300000 பியஸ்டாஸ் (இந்தோ சீன நாணயம்) விலைகொடுத்து வாங்கினார். ஒரு தலைவரின் படத்தை வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு விலை கொடுத்து வாங்கியதாக சரித்திரம் இல்லை!

இன்னொரு சம்பவம், தென் வியட்னுமில் ஒரு கொரில்லா வீரர் பிரெஞ்சுக்காரர்களோடு நடைபெற்ற சண்டையில் படுகாய மடைந்து, விழுப்புண்களிலிருந்து இரத்தம் வடிய கீழே கிடந்தார். அப்போது அவர் தனது கோட்டைக் கழற்றி தன் இரத்தத்தைக் கொண்டு ஹோ-சி-மின் படத்தை அதில் வரைந்தார். இந்தப் படத்தை ஒரு பெரிய பணக்காரர் 1 லட்சத்து 20 ஆயிரம் பியஸ் டாஸ் கொடுத்து விலைக்கு வாங்கினார்!

மூன்றாவதொரு சம்பவம். வியட்னும் பெண்கள் லீக், ஜனாதி பதி ஹோ-சி-மினுக்கு ஒரு பட்டுச் சட்டையை அன்பு அளிப்பாக அளித்தது. அதை அவர் காயமடைந்த சோல்ஜர்களுக்குப் பரிசா கக் கொடுத்துவிட்டார். காயமடைந்த வீரர்கள் நிவாரணக் கமிட்டி இதனை 4 லட்சத்து 67 ஆயிரம் பியஸ்டாஸுக்கு ஏலத்துக்கு விட்டுவிட்டது! ஆனால் நாடெங்கிலுமிருந்த பல பொதுஜன ஸ்தாபனங்களும் இதரர்களும் இந்த சட்டைக்குத் தங்கள் இன்னும் அதிக விலை கொடுக்கத் தயார் என்றும், ஆகவே, ஏலத்தை இன்னொரு தேதிக்கு ஒத்திவைக்குமாறும் கேட்டுக்கொண்டு நூற்றுக்கணக்கான தந்திகள் அடித்தார்கள்.

இவையெல்லாம் ஹோ-சி-மின்பால் இந்தோ சீன மக்கள் வைத்துள்ள அபரிமித அன்பை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக் காட்டுகின்றன. மக்களுக்கும் அவருக்குமிடையே உள்ள மிக நெருங்கிய நேச பாவத்தை விளக்க இன்னும் ஒன்றிரண்டு சம்பவங்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

1946-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் தேதி பிரெஞ்சுக்காரர்களுடன் ஹோ-சி-மின் ஒரு உடன்பாடு செய்துகொண்டார் என்பதை நாம் ஏற்கனவே கூறியுள்ளோம். இந்த உடன்பாட்டை வியட்னும் மக்கள் கொஞ்சமும் விரும்பவில்லை. காரணம், பிரெஞ்சு காலனி ஆதிக்கக்காரர்களை அவர்கள் அவ்வளவு தூரம் விஷமென வெறுத்தார்கள். ஆகவே, இந்த ஒப்பந்தத்திற்கெதிராக தேசம் முழுவதும் அதிருப்தி தலை தூக்கிற்று; பல முக்கியப் பத்திரிகைகள் எல்லாம்கூட இந்த ஒப்பந்தத்தைத் தாக்கி எழுதின.

ஆனல் ஹோ-சி-மின் லட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்த ஒரு பிரம்மாண்டமான கூட்டத்தில் தோன்றி, தான் இந்த ஒப்பந்தத்தை செய்துகொள்ள வேண்டி ஏற்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளை விளக்கிவிட்டு பின் கண்டவாறு கூறினர்.

"அன்பிற்குரிய என் தோழர்களே, உங்கள் ஹோ-சி-மின் ஒருநாளும் தன் தாய் நாட்டை விற்கமாட்டான். தேசம் பரிபூரண சுதந்தரமடையும்வரை ஒருநாள் ஒருபொழுதும்கூட ஓயமாட்டான். இதை நம்புங்கள்" என்று குழந்தை உள்ளத்தோடு கூறினர் ஹோ-சி-மின்.

அவ்வளவுதான், அங்கு குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் நெஞ்சங்களிலே பதுங்கியிருந்த அதிருப்தி பஞ்சாய்ப் பறந்தோடிற்று! "எங்கள் மாசற்றத் தலைவன் ஹோ-சி-மின் வாழ்க!" என்று ஓராயிரம் இடிகள் இடித்ததுபோல அந்த ஜன சமுத்திரத்திலிருந்து பேரொலி எழுந்தது.

இதனைக் கண்டு அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த அயல் நாட்டு பத்திரிகை நிருபர்கள் அளவற்ற ஆச்சரியமடைந்து விட்டார்கள். ஹோ-சி-மின் என்கிற ஒரு வார்த்தை எத்தனைப் பெரிய அற்புதத்தை நிகழ்த்திவிட்டது என்று அவர்கள் மூக்கிலே விரலைவைத்து வியந்துபோய் நின்றுர்கள்.

இன்னெரு சம்பவம். 1946 ஏப்ரல் மாதம் ஹனேயிலிருந்த வியட்னும் நிதி இலாகா காரியாலயத்தைக் கைப்பற்ற பிரெஞ்சு துருப்புகள் முயற்சித்தன. உடனே மக்கள் இதனை எதிர்த்துத் தாங்களாகவே பிரம்மாண்டமான ஒரு பொது வேலை நிறுத்தத்தை

நடத்தினர். இதனால் ஹனோயின் வாழ்க்கையே அடியோடு ஸ்தம்பித்துப் போயிற்று. மக்களின் இந்த நிரதிசய உறுதியின் முன்பு பணிந்துபோய் பிரெஞ்சுக்காரர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி எவ்வளவோ கேட்டுக்கொண்டும் ஜனங்கள் இதற்குத் துளியும் மதிப்புக் கொடுக்கவில்லை.

மந்திரத்தால் மாங்காய் விழுமோ என்னமோ நமக்குத் தெரியாது. ஆனால் ஹோ-சி-மின் ஹனோய் ரேடியோவில் ஒரு வார்த்தை சொன்னதுதான் தாமதம், அடுத்த விநாடியே பொது வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டது; கடைகள், தொழிற்சாலைகள், நிறுவனங்களெல்லாம் 'மட மட'வென்று திறக்கப்பட்டன; ஸ்தம்பித்துக் கிடந்த ஹனோய் நகரம் ஹோ-சி-மினின் ஒரு சொல்லால் மீண்டும் உயிர்பெற்றது! வாராது வந்த மாமணியான தங்கள் தலைவர்மீது மக்களுக்கு அத்தனை அன்பு; மதிப்பு!

இன்னும் ஹோ-சி-மினின் அப்பழுக்கற்ற திருப்பெயர் இடம் பெறாத இந்தோ–சீன உள்ளங்களே இல்லை! ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரிலே பகைவனின் துப்பாக்கி ரவைகளை நெஞ்சிலேந்தி ரத்தத்தோடு உயிர் துறக்கும் ஒரு வியட்னாம் வீரனின் கடைசி வார்த்தை 'என் நாடு வாழ்க! என் தலைவர் ஹோ-சி-மின் வாழ்க!' என்பதாகத்தான் இருக்கும்! அதுமட்டுமல்ல, தொழிற்சாலைகளிலும், தோட்டங்களிலும், வயல்களிலும் உழைக்கும் தொழிலாளர்களும், விவசாயிகளும் ஏனையோரும் "என் தாய் நாட்டிற்காக, என் அண்ணல் ஹோ-சி-மின்னுக்காக உழைப்போம், உற்பத்தியைப் பெருக்குவோம்" என்று சொல்லிக்கொண்டுதான் உற்சாகத்தோடு வேலை செய்வார்கள்!

இவ்விதம் ஹோ-சி-மின் இந்தோனேஷ்ய மக்களின் தன்னலங்கருதா அன்புத் தந்தையாக, வாழ்விழந்த மக்களின் வழிகாட்டியாக, திக்கற்றவர்களின் தீபஸ்தம்பமாக, அந்தகாரத்திலிருந்து அருணோதயம் நோக்கி அழைத்துச் செல்லும் ஒளிவிளக்காக இன்று திகழ்கிறார். பிளவுண்ட நாடு ஒன்றுபடவும், சோஷலிஸ ராஜபாட்டையிலே வியட்னாம் கம்பீரமாக முன்னேறவும் அவர் நம்பிக்கை மிகுந்த விடிவெள்ளியாக விளங்குகிறார்.

இதனால்தான் அவரது பரம எதிரிகளால்கூட அவர்மீது குறை கூற முடியவில்லை. 'மார்னிங் டிரிப்யூன்' என்னும் சிங்கப்பூர் பத்திரிகை அவரைப்பற்றி பின்கண்டவாறு எழுதியுள்ளது:

"ஒரு புத்தகத்தின் அட்டையைக் கொண்டு அதன் தரத்தை நிர்ணயித்துவிட முடியாது. அதுபோல ஹோ-சி-மினின் உருவத்தைக் கொண்டு அவர் ஒரு சாதாரண மனிதர் என்று எண்ணிவிடு

வதற்கில்லை. அவரது உடல் துரும்பு போன்றது; ஆனாலும் உள்ளம் இரும்பு போன்ற உறுதி படைத்தது. அவர்மீது இந்தோனேஷ்ய மக்கள் அசைக்கமுடியாத நம்பிக்கையும் விசுவாசமும் வைத்துள்ளனர்."

'ஐ. சி. ஐ. பாரிஸ்' என்னும் பிரெஞ்சுப் பத்திரிகை அவரை இந்தோ-சீனாவின் இதயம் என்று வர்ணித்துள்ளது.

முதலாளித்துவத்திற்கு சர்வசதா துதி பாடுவதையே தொழிலாகக் கொண்ட ஆண்ட்ரு ராத் என்னும் அமெரிக்கப் பத்திரிகை கூட ஒப்பற்ற உலக தலைவர்கள் வரிசையிலே சுலபமாக இடம் பெறத்தக்கவர் ஹோ-சி-மின் என்று புகழ்ந்துள்ளார்.

கடைசியாக, ஹோ-சி-மின் யார் என்ற கேள்விக்கு பாரிஸ் சைகோன் என்னும் பிரெஞ்சுப் பத்திரிகை மிக ரத்தினச்சுருக்கமாக கொடுத்துள்ள பதிலோடு இந்த சிறு நூலை முடிப்போம்:

"ஹோ-சி-மின் யார்? ஹோ-சி-மின்தான் வியட்னும்; வியட்னும்தான் ஹோ-சி-மின்!"

வாழ்க புதிய ஆசியாவின் புரட்சித் தலைவர் டாக்டர் ஹோ-சி-மின்! வாழ்க இந்தியா-வியட்னும் நட்புறவு!!

No. ______
109002
LIBRARY

SCANNED

1858

SCANNED